வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03 | 02.06.2022 வியாழக்கிழமை | இதழ் : 178 | பக்கங்கள் : 16




## காலிமுகத்திடல் தாக்குதல்:

## மகிந்த மற்றும் ஜோன்ஸ்டன் சந்தேகநபர்களென அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 02

காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, மகிந்த கஹந்தகம ஆகியோரை சந்தேக நபர்களாக பெயரிட கொழும்பு கோட்டை நீதிவான் நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

காலிமுகத்திடலில் நடைபெற்று வரும் கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம

15

# துமிந்த சில்வா நேற்று கைது!



கொழும்பு, ஜூன் 02

**ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்று குற்றப் புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.**

கொழும்பு - ஸ்ரீ ஜெயவர்த்தன புர மருத்துவமனையில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டாரென உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர கொலை குற்றச்சாட்டில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இவரை கடந்த ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்திருந்தார்.

அவரின் விடுதலை குறித்து பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திரவின் மனைவி சுகுணா பிறேமச்சந்திர, மகள் ஹிரு

15

## வடமராட்சி வாள்வெட்டு; ஆறு நபர்கள் படுகாயம்!

வடமராட்சி, ஜூன் 02

வடமராட்சியில் நேற்று இரு குழுக்களிடையே இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் 6 பேர் படுகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர் என்று அறிய வருகின்றது.

வடமராட்சி - பருத்தித்துறை - சுப்பர் மடத்திலேயே நேற்று பிற்பகல்

15

## சிகரெட் விலை ரூ. 5ஆல் உயர்வு

கொழும்பு, 02

அனைத்து உள்ளூர் சிகரெட்களின் விலையும் நேற்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வற் வரியை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்தே இந்த விலையுயர்வு ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நூடில்ஸ், கைபேசி, இலத்திரனியல் பொருட்கள் உள்ளிட்ட

## அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதிக்கு விதித்த தடை நீக்கம்!

கொழும்பு, ஜூன் 02

திராட்சைப் பழம், அப்பிள் உட்பட பழவகைகள், சொக்லேட் உள்ளிட்ட பால் உற்பத்திகள், நூடில்ஸ் வகைகள், பழச்சாறுகள், தண்ணீர், பியர், வைன் வகைகள், சிகரெட்கள் மற்றும் சுருட்டு வகைகள் உட்பட புகையிலை உற்பத்திப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள், ரயர்கள், செருப்பு மற்றும் சப்பாத்துகள், இலத்திரனியல் உபகரணங்கள், வாகனங்கள், விளையாட்டுப் பொருட்கள் உள்ளிட்ட 369 பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

நேற்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இறக்குமதி கட்டுப்பாடுகள்

15

## அயலவர் தன்னை தாக்கினர் என்று முறைப்பாடளித்தவர் மர்ம மரணம்!

வடமராட்சி, ஜூன் 02

தன்னை அயலவர்கள் இருவர் தாக்கினர் என்று தெரிவித்து பொலிஸில் முறைப்பாடளித்த மூதாட்டி ஒருவர் மர்மமாக இறந்த நிலையில் அவரின் சடலம் மீட்கப்பட்டது.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வதிரி பகுதியிலேயே நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வதிரி சந்திக்கு அண்மையாக தனிமையில் வசித்து வந்த 76 வயது பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர், அயலவர்கள் இருவர் தன்னைத் தாக்கினர் என்று நேற்று முன்தினம் காலை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்

15

## அமைச்சர்கள் நிமால், மகிந்த கட்சி பதவிகளிலிருந்து நீக்கம்

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

சர்வ கட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ள நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மகிந்த அமரவீர ஆகியோரை அனைத்து பதவிகளிலும் இருந்து நீக்குவதாக சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இறுதியாக இடம்பெற்ற சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்

15

## பால் பொருட்கள், பழங்களுக்கான இறக்குமதி தீர்வைகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 02

பால் உற்பத்திப் பொருட்கள் மற்றும் பழ வகைகளுக்கான இறக்குமதி தீர்வைகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்த 369 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடு நேற்று தளர்த்தப்பட்டது. இதையடுத்தே நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தீர்வையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் உற்பத்தி சார்ந்த வெண்ணெய், யோக்கற் உள்ளிட்ட பொருட்களுக்கான தீர்வை 100வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி, 1000 ரூபாய் பெறுமதியான வெண்

15

## யாழ். நூலக எரிப்பை கண்டித்து

## 41 ஆண்டுகளின் பின்னர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 02

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரியூட்டப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து நேற்று கொழும்பு காலிமுகத்திடலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு - காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டத்தை முன்னெடுத்து வருபவர்களே இந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

யாழ்ப்பாணம் பொது நூலகம்

15

## சகல தனியார் பஸ் சேவைகளும் திங்கட்கிழமை முதல் நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 02

எதிர்வரும் ஆறாம் திகதி திங்கட்கிழமை முதல் அனைத்து தனியார் பஸ்களும் சேவைகளில் ஈடுபடாது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"க. பொ. த சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்த நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

"பஸ்களுக்கு டீசல் பெறுவதற்கு பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்தவாரம், பஸ்களுக்கு டீசல்

15

## மகிந்த மீதான விசாரணை ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 02

மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது முன்னெடுக்கவிருந்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடல் போராட்டக்

15

## மதுபான வகைகளின் விலைகளும் உயர்ந்தன!

கொழும்பு, ஜூன் 02

நாடு முழுவதும் நேற்று புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபான வகைகள் விலை உயர்த்தப்பட்டன.

750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் ஒன்று 520 ரூபாயாலும், 180 மில்லிலீற்றர் 130 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதேசமயம் பியர் போத்தல் 30 ரூபாயாலும், சிறிய பியர்

15

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து பேசினார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு முழு நாடுமே ஒன்றுதிரண்டு பணியாற்றுகின்றபோது, ஊர்க்குருவியர் அதற்கு எதிராகவே தொடர்ந்து எழுதி வருகின்றாரே, அது எதற்காக என்று, எடுத்த எடுப்பில் கேள்வி கேட்டார்.

‘ராஜபக்ஷக்கள் வீட்டுக்குப் போகவேண்டியவர்கள் என்பதில் எனக்கு எந்தக் கருத்துவேறுபாடும் இல்லையே, ஆனால், அவர்கள் போகுமுன்னர் அவர்களது கதிரையில் யாரை அமர்த்தப்போகின்றோம் என்பதில் தெளிவு இருக்க வேண்டும் என்றுதான் ஊர்க்குருவி தொடர்ந்து எழுதி வருகின்றது’ என்றேன்.

‘மஹிந்த ராஜபக்ஷ பதவியிலிருந்து வெளியேறினார். அவரது இடத்தை ரணில் நிரப்பினார், சரி. ஆனாலும், ரணிலின் ஆட்சி அதே பாராளுமன்றத்தால் அதாவது, பொதுஜன முன்னணியை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தால்தானே வழிநடத்தப்படுகின்றது? அதுவும் சரி, அவர் போன பின்னர், ரணிலின் கரங்களைப் பலப்படுத்தி நாடு மூச்சுவிட அனுமதிப்பதைவிட்டுவிட்டு, தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலக வேண்டும் என்று கேட்பது தவறு என்றுதான் எழுதுகிறோமே தவிர, அவர் பதவியில் தொடரவேண்டும் என்பதல்ல எமது நோக்கம். அவர் இப்போது பதவி விலகினால் இந்த பாராளுமன்றமே அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்யும். அதிகம் ஏன், அவர் பதவி விலகும் முடிவுக்கு வந்தால், உடனே ரணிலை பதவி விலக்கிவிட்டு பசில் ராஜபக்ஷவையோ அல்லது பொதுஜன முன்னணியில் வேறு ஒருவரையோ பிரதமராக்கிவிட்டு விலகினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அதுதான், ரணில் ஆட்சி சில மாதங்களாவது பிரச்னை இன்றி தொடரவேண்டும் என்கிறோம்’ என்றேன்.

நான் என்ன சொன்னாலும் அவர் கேட்பதாகவோ, ஏற்றுக்கொள்வதாகவோ இல்லை.

‘என்னதான் இருந்தாலும் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒருவரை பிரதமராக நியமித்தது தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத்தானே? நீங்களே மஹிந்தர் ஜனாதிபதியாக இருந்தபோது, ரணிலுக்கு கட்சிக்குள் பிரச்னைகள் ஏற்பட்டபோதில் எல்லாம் அவருக்கு மஹிந்தர் உதவினார் என்று எழுதியிருக்கின்றீர்கள். இப்போது, மஹிந்த குடும்பத்திற்கு உதவுவதற்காகத்தான் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை பிரதமராக்கியிருக்கின்றார்கள்’ என்றார் அவர்.

அவர் யாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு இப்படிக் கதைக்கின்றார் என்பதை அறிந்துகொள்ள கலாநிதிப் பட்டத்திற்கு படித்திருக்கவேண்டுமா, என்ன?

‘தங்களைப் பாதுகாக்கத்தான் அவர்கள் ரணிலை கொண்டுவந்தார்கள் என்று சொல்லுங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதற்காக, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரை கொண்டுவந்தது ஜனநாயக விரோதம் என்ற வகுப்புக்களை எல்லாம் எடுக்காதீர்கள்’ என்றேன் நான்.

அவருக்கு சற்று கோபம் வந்திருக்கவேண்டும். ‘ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்? அவர் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் தானே?’ என்று பதில் கேள்வி கேட்டார்.

‘மக்களால் நிராகரிக்கப்பட்டவர் பிரதமராவது தவறு என்றால், மக்களால் தெரிவுசெய்யயப்பட்ட ஜனாதிபதியையோ பிரதமரையோ பதவியிலிருந்து போங்கள் என்று சொல்வதும் ஜனநாயக விரோதம்தானே. அதுவும் தவறுதானே’ என்று திரும்பக்கேட்டேன். அதற்கு அவரிடம் பதிலில்லை.

‘மக்கள், வீதிகளில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக போராட்டங்கள் செய்கின்றார்கள் என்று வாதிடுகின்றார்கள். அது எத்தனைபேர்? கடந்த தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக, அதிகம் ஏன், ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு நாற்பத்தி ஐந்து லட்சம் பேர் வாக்களித்தார்களே. அந்த நாற்பத்து ஐந்து லட்சம் பேரும்கூட இதுவரை வீதிக்கு வந்தார்களா, இல்லையே. ராஜபக்ஷக்களை வீட்டுக்குப் போங்கள் என்று மக்கள் கேட்கின்றார்கள் என்பது ஏற்புடையதல்ல. சில நூறு பேர் கோரிக்கை வைப்பதை ஒட்டுமொத்த மக்களும் வைப்பதாக சில கருத்துருவாக்கிகள் எழுதுவது சரியானதுதானா என்பது தெரியவில்லை. அவர்களை வீட்டுக்குப் போங்கள் என்று மக்கள், தேர்தல் ஒன்றின் மூலமே கூறவேண்டும்...’

அவர் இடையில் புகுந்து பேசுவதற்கு இடம் விடாமல், நான் பேசிக்கொண்டே இருந்தேன்.

‘நீங்கள் ஊடகக்காரரர், இப்படித்தான் நீங்கள் சொல்வதுதான் சரி என்று வாதிட்டுக்கொண்டே இருப்பீர்கள்’ என்று சினந்துவிட்டு, தொடர்பைத் துண்டித்துக்கொண்டார்.

**- ஊர்க்குருவி**

# கூடிய விலைக்கு விற்பனை செய்வோரிடம் பொருட்களைகொள்வனவுசெய்யாதீர்கள்!

## பொதுமக்களை கேட்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 02

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி பொருட்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வோரிடம், பொருட்களை கொள்வனவு செய்வதைப் பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது, நாடு முழுவதிலும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை நடத்தி கைதும் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி சிலர் பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்து பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடும். அவர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. அதாவது பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு பொதுமக்கள் உடந்தையாக இருக்கக்கூடாது.

அவ்வாறான வர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் அவதானமாக செயல்பட வேண்டும். மேலும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தேவையான எரிபொருளின் அளவு முன்னரை விட அதிகளவில் கிடைத்துள்ளது. எனினும் மேலதிகமாக கிடைக்கும் எரிபொருள் எங்கே செல்கின்றது என்பது தெரியவில்லை. மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகம் தற்போது பிரச்னையாக காணப்படுகின்றது. இதற்கான தீர்வு விரைவில் கிடைக்கும் - என்றார். (ஐ-3)

## கொழும்பில் விபத்து; 12 வாகனங்கள் சேதம்!



கொழும்பு, ஜூன் 02

கொழும்பு வஜிர வீதியில், விசாகா வித்தியாலயம் அருகே இந்த விபத்து இடம்பெற்றது.

அதிவேகமாகச் சென்ற கார் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 9 கார்கள் மற்றும் இரு முச்சக்கர வண்டிகள், கப் ரக வாகனம் என 12 வாகனங்கள் சேதமடைந்தன.

சாதாரணதரப் பரீட்சை நடைபெற்ற நிலையில் பாடசாலைக்கு அருகில் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே விபத்தால் அதிக வாகனங்கள் சேதமடைந்தன.

சாரதியின் கட்டுப்பாட்டை வாகனம் இழந்ததே இந்த விபத்துக்கு காரணம்.

விபத்துக்குள்ளான வாகனத்திலிருந்த இருவர் பம்பலப்பிட்டி பொலிஸாரால் மீட்கப்பட்டு அவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகள பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மகிந்தவை இந்தியா அழைக்கிறார் பா.ஜ.கவின் சுப்பிரமணியன் சுவாமி

சென்னை, ஜூன் 02

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைப்பதாக அந்த நாட்டை ஆளும் பா. ஜ. கவின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி தனது ருவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

“எனது நண்பரும் இலங்கை தலைவருமான மகிந்த ராஜபக்ஷவை புதுடில்லியில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றுவதற்காகவும், இந்து - பௌத்த ஆலயங்களுக்கு விஜயம் மேற்கொள்வதற்காகவும் அழைக்கவுள்ளேன். அவர் மழைக்காலத்துக்கு முன்னர் ஜூன் மாதத்தில் இந்தியா வரமுடியும் என நான் எதிர்பார்க்கின்றேன்”, என்று அந்தப் பதிவில் சுப்பிர மணிய சுவாமி தெரிவித்துள்ளார். (ஐ)

## தாக்குதலில் ஈடுபட்டவர் கைதானார்!

முல்லைத்தீவு, ஜூன் 02

புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெறவந்த நபர் ஒருவர் தாக்குதலில் ஈடுபட்ட குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொலிஸாரின் கண்காணிப்பில் எரிபொருள் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் ஒருவர் முரண்பாட்டை ஏற்படுத்தி சங்கத்தின் பொதுமுகாமை யாளர், பணியாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டார். இதையடுத்தே தாக்குதலை நடத்திய நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# போதைப்பொருள் ஒவ்வாமையாலேயே மன்னாரில் காருக்குள் இருவர் உயிரிழப்பு

மன்னார், ஜூன் 02

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை இரவு காரினுள் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் பயணித்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களின் பிரேதப் பரிசோதனை யாழ். வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது.

இதன்போதே மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்திய மையினால் ஏற்பட்ட ஒவ்வாமை உயிரிழந்தமைக்கான காரணம் என தெரிய வந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் நான்கு பேர் பயணித்துக் கொண்டிருந்தபோது மன்னார், உயிலங்குளம் பகுதியில் ஒரே நேரத்தில் இருவர் திடீரென சுகவீனமடைந்து அதே வாகனத்தில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பேசாலையைச் சேர்ந்த எம்.பிரதீப் (வயது-26) மற்றும் காட்டாஸ்பத்திரியை சேர்ந்த எம்.மசூர் (வயது-35) என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரு சடலங்கள் மன்னார் வைத்தியசாலையில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சடலப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சடல பரிசோதனை இடம் பெற்றுள்ளது.

சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
02.06.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சோசலிசவாதிகளிடமும் அதே அச்சம்தான்?

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மத்தியில் முன்னணி வகிக்கும் அமைப்புக்களில் ஒன்று, முன்னணி சோசலிச கட்சியாகும். அதேபோன்று, ஜே. வி. பியும் போராட்ட இளைஞர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. குமார் குணரட்ணம், ஆரம்பகால ஜே. வி. பி. தலைவர்களில் ஒருவராவார். குறிப்பாக தென்னிலங்கை சிங்கள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் குமார் குணரட்ணத்தின் கட்சியும் கணிசமான செல்வாக்கை செலுத்திவருகின்றது.

ஆங்கில ஊடகமொன்றுடனான நேர்காணலில், சமஷ்டி பற்றி கேட்கப்படும்போது, பாரம்பரிய தென்னிலங்கை சிங்கள கட்சிகள் எவ்வாறு தடுமாறுமோ, அவ்வாறான தடுமாற்றமே குணரட்ணத்திடமும் வெளிப்படுகின்றது. அண்மையில், குணரட்ணம் குழுவினரை, கூட்டமைப்பினரும் சந்தித்திருந்தனர். கூட்டமைப்பினர் குணரட்ணத்தை சந்திக்குமளவுக்கு, ராஜபக்ச எதிர்ப்பு அரசியலை பற்றவைத்ததில், குணரட்ணத்தின் முன்னணி சோசலிசக் கட்சி முதன்மையான பங்கு வகித்திருந்தது.

சமஷ்டி பற்றி கேட்கும் போது, தமிழீழ கோட்பாட்டை பெரும்பாலான தமிழர்கள் கைவிட்டுவிட்டதாகக் குறிப்பிடும் குணரட்ணம், ஒவ்வொருவரும், தங்களின் தனித்துவமான அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, இலங்கையர்கள் என்னும் அடிப்படையில் சகவாழ்வை வாழ்வது தொடர்பிலேயே தாம் சிந்திப்பதாகக் குறிப்பிடுகின்றார். சோசலிச முறைமையின் கீழ் இந்தப் பிரச்னையை தீர்ப்பது பற்றியே தாம் சிந்திப்பதாக குறிப்பிடுகின்றார். இது இடதுசாரிகளின் ஒரு பழைய - இதமான கற்பனை. இவ்வாறான கற்பனைகளை முன்வைத்த பலர், பின்னாட்களில், சிங்கள இனவாத சகதிக்குள் மறைந்து போனதே இலங்கைத் தீவின் வரலாறு. சோசலிசம் பேசுபவர்களிடமுள்ள அடிப்படையான அரசியல் பலவீனம் - சோசலிசம் வரும்வரையில் பிரச்னைகளுக்கு என்ன தீர்வு - என்னும் கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லாததே.

ஜே. வி. பியும் இவ்வாறான சோசலிசக் கதைகளையே கூறுவதுண்டு. ஆனால், இவர்கள் எவரிடமும் ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை நடைமுறையில் கையாள்வதற்கான எந்தவொரு தீர்வும் இல்லை. அது தொடர்பில் இவர்களிடமும் எந்தவொரு காத்திரமான பார்வையும் இல்லை. அவ்வாறான பார்வையிருந்திருந்தால், ஜே. வி. பி., 18 வருடங்களாக, நிர்வாக ரீதியில் இணைந்திருந்த, வட, கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான வழக்கை தாக்கல் செய்திருக்காது.

இன்று மகிந்தவுக்கு எதிராகக் காலிமுகத்திடலில் முகாமிட்டிருப்பவர்களோடு கலந்திருக்கும் இதே ஜே. வி. பிதான், இறுதி யுத்தத்தின்போது, மகிந்தவுக்கு ஆதரவாக சிங்கள கிராமங்களில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தது. மகிந்த யுத்தத்தின்போது, சோர்ந்துவிடாமல் அவருக்கு உத்திவேகமளித்தது. இதன் தொடர்சியாகவே, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் சாத்தியப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை சட்ட ரீதியில் செல்லாக் காசாக்கும் செயலில் இறங்கி, வெற்றியும் பெற்றது. இனவாத, அடிப்படைவாத சிங்கள கட்சிகள்கூட அவ்வாறானதொரு வழக்கை தாக்கல் செய்ய முற்படவில்லை.

இந்தப் பின்னணியில் நோக்கினால், காலாவதியாகிப் போன கருத்தியல்களின் வழியாக, சிங்கள இளைஞர்களை வழிநடத்த முற்படும் இவர்கள் தொடர்பிலும், எச்சரிக்கையுடன்தான் இருக்க வேண்டும். இவர்கள் பேசும் சோசலிசம் இனிக்கக்கூடுமோ என்று, நம்பிவிடுவதும் ஆபத்தானது. குமார் குணரட்ணம் குழுவினர், ஜே. வி. பி. ஆகியோர், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பரம வைரிகளாவர்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றலாமென்னும் ஒரு வாதம் தலைதூக்கும் போது, தென்னிலங்கையில் அதற்கான கருத்தில் பலத்தை இவர்கள் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். இவர்களுடன் அணிதிரண்டிருக்கும் இளைஞர்கள் - வேண்டுமானால் இவ்வாறான சிந்தனைகளால் பாதிக்கப்படாதவர்களாக இருக்கக்கூடும். ஆனால், இவர்களின் வழிகாட்டலில், அவர்கள் இயங்குகின்றபோது, அவர்களும் திசை மாறிப் போகவே அதிக வாய்ப்புண்டு. தமிழர் பிரச்னையென்று வருகின்றபோது, பாரம்பரிய சிங்கள கட்சிகளும், இடதுசாரித்துவம் பேசுகின்றவர்களும் - இறுதியில் ஒரே பாதையில்தான் பயணம் செய்கின்றனர். ஆனால், இவர்கள் பயன்படுத்தும் சொற்களில்தான் வேறுபாடுகள் உண்டு. தென்னிலங்கையின் அனைத்து புத்தியுள்ள அரசியல் தரப்பினரும், இந்தியா தொடர்பிலும், தமிழ்நாடு தொடர்பிலும் மீள முடியாத அச்ச நோய்க்குள் சிக்கியிருக்கின்றனர்.

# நிறைவேற்று அதிகாரத்தை வரையறை செய்த உயர்நீதிமன்றம்!



**அலசுவது இராஜதந்திரி**

*ஒரு பட்டப்பகல் கொலையாளியான துமிந்த சில்வாவை சிறையிலிருந்து பொது மன்னிப்பின் அடிப்படையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுதலை செய்திருந்தமையை உயர் நீதிமன்றம் இரத்துச் செய்து மீளவும் அவரை சிறையிலிடுமாறு குற்றப்புலனாய்வுத்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.*

*ஒரு பட்டப்பகல்வேளை பலர் முன்னிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷமன் பிறேமச்சந்திரவை படுபாதகமான முறையில் மற்றுமொரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான துமிந்த சில்வா கொலை செய்திருந்தார்.*

*இருவருமே முல்லேரியா பிரதேசத்தை சேர்ந்தவர்கள். இந்தப் பிரதேசம் பலதரப்பட்ட ‘நட்டா முட்டி’த்தனத்துக்கு பிரபலமான இடமாகும். போதைவஸ்து கும்பல்களும் இந்தப் பிரதேசத்தில் சாவகாசமாக இருந்து வருகின்றனர். அவர்களுக்கு அரசியல் மற்றும் பொலிஸ் செல்வாக்கு என்பவைகூட இருந்து வருகின்றதென்றே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர, துமிந்த சில்வா ஆகிய இருவருக்கிடையிலும் அரசியல் போட்டி நீண்ட காலமாகவே நிலவி வந்திருந்தது.*

*துமிந்த சில்வா அரசியலுக்கு புதியவர். ஆனால், பாரத லக்ஷமன் பிறேமச்சந்திர காலஞ்சென்ற திரைப்பட நட்சத்திரமும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கணவருமான விஜய குமாரதுங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட சிறீலங்கா மகா ஜன கட்சியில் அவருக்கு பக்கபலமாக இருந்து வந்தார். இருப்பினும் அரசியல் எதிரிகளால் விஜய குமாரதுங்க 1988ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.*

*துமிந்த சில்வாவும், பாரத லக்ஷ்மன் பிறேமசந்திரவும் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர்கள். இருந்தபோதிலும் அரசியல் போட்டித்தன்மை காரணமாக எதிரும்புதிருமாக இருந்தனர்.*

*2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி முல்லேரியாவில் உள்ளூராட்சி தேர்தல் பிரசார நவடிக்கைகள் சூடு பிடித்திருந்த வேளை வீதிப் பிரசார நடவடிக்கையொன்றின்போது இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திரவை அவரின் அரசியல் எதிரியான துமிந்த சில்வா படுமோசமான முறையில் தன்வசமிருந்த கைத்துப் பாக்கியால் சுட்டுக்கொன்றிருந்தார். இந்தச் சூட்டுச் சம்பவத்தில் மேலும் மூவர் பலியாகினர்.*

*இதனையடுத்து பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர கொலைக் குற்றச்சாட்டின் பேரில் துமிந்த சில்வா கைதானார். அவரோடு சேர்த்து மேலும் பன்னிரெண்டு பேரும் கைதாகியிருந்தனர்.*

*2015ஆம்ஆண்டு மார்ச் 3ஆம் திகதி சட்டமா அதிபர் துமிந்த சில்வா உட்பட 12 பேர் மீது வழக்குத்தாக்கல் செய்திருந்தார். இதனையடுத்து பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திர கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*விசாரணைகளின் முடிவில் 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி துமிந்த சில்வாவுக்கும் வேறு மூவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.*

*இருந்தபோதிலும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பெரிதும் வேண்டப்பட்டவரான துமிந்த சில்வா 2021ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதி பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலையானார்.*


*உறுதியாக நிலைநாட்டப்பட்ட நீதிக்கு துமிந்த சில்வாவின் விடுதலை சவால் விட்டிருந்தது . இதனையடுத்து பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திரவின் புதல்வியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா உயர் நீதிமன்றத்தை நாடி துமிந்த சில்வாவின் விடுதலையை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்ததையடுத்து மீளவும் துமிந்த சில்வாவை சிறைவைக்குமாறு உயர் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.*

*இதன்மூலம் ஒரு பட்டப்பகல் கொலையாளி மீளவும் சிறை வைக்கப்பட்டுள்ளதோடு பாரத லக்ஷ்மன் பிறேமச்சந்திரவின் புதல்வியான ஹிருணிகா பிறேமச்சந்திரவின் அரசியல் ஆளுமையும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.*

*நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகமானதிலிருந்து நீதித்துறையில் பல்வேறு கட்டங்களில் தலையீடுகள் இருந்து வந்தன. அந்த நாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்மால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்களைக்கூட அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்.*

*இருந்தபோதிலும் உயர் நீதிமன்றம் பெரிதும் தனது கடமையை செய்வதிலிருந்தும் விலகாதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. துமிந்த சில்வாவை மீளவும் சிறை வைக்குமாறு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, நீதித்துறை மீதான நம்பகத்தன்மையை உறுதிசெய்துள்ளதோடு நிறைவேற்று திகாரம் எல்லை மீறுவதையும் வரையறை செய்துள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
ஈடுபடும் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள். எதிர்பாராத லாபம் உண்டாகும். பணவரவால் கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள்.

**இடபம்**
ஈடுபடும் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். பொருள் சேர்க்கை உண்டாகும். ஆதாயமான நாள். எதிர்பாராத லாபம் உண்டாகும். பணவரவால் கடன்களை அடைத்து நிம்மதி காண்பீர்கள்.

**மிதுனம்**
நெருக்கடியை சமாளித்து வெல்வீர்கள். மகிழ்ச்சி நிலவும். மனதில் புதிய சிந்தனை மேலோங்கும். மனதில் இருந்த அழுத்தம் குறையும். விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள்.

**கடகம்**
எதிர்பாராத செலவு உண்டாகும். பயணம், பண விஷயத்தில் எச்சரிக்கையும் கவனமும் தேவை. வழக்கு முடிவு உங்களுக்கு சாதகமாகும். அரசு வழியில் நன்மை ஏற்படும். செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்**
வருமானத்தில் இருந்த தடை விலகும். உங்களுடைய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். லாபமான நாள். வராமல் இருந்த பணம் உங்கள் கைக்கு வரும். தொழிலில் இருந்த சங்கடம் விலகும்.

**கன்னி**
தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்கள் பாராட்டு பெறுவர். உழைப்பிற்கு மரியாதை உண்டாகும். தொழிலில் இருந்த தடைகளை சரி செய்வீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்**
முயற்சிகளில் இழுபறி உண்டாகும். அரசு வழியில் பிரச்னைகள் உருவாகும். எச்சரிக்கை அவசியம். உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். அரசு சம்பந்தப்பட்ட செயல்களில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.

**விருட்சிகம்**
எதிர்பார்த்தவற்றில் இழுபறியே இருக்கும். பயணத்தில் கவனமும் எச்சரிக்கையும் தேவை. வீண் பிரச்னைகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்த்த நன்மை உண்டாகாமல் போகும். திட்டமிட்ட வியம் குளறுபடியாகும்.

**தனுசு**
கணவன் மனைவிக்குள் பிரச்னை தீரும். குடும்பத்தினரின் தேவை நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். நண்பர் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த வருவாய் வரும். செயல்களில் புதிய வேகம் இருக்கும்.

**மகரம்**
முயற்சியில் இருந்த தடை விலகும். விரோதிகள் விலகிச் செல்வர். வரவுகள் கூடும். வழக்கத்தை விட செயலில் வேகம் இருக்கும். நிறைவேறாத எண்ணம் கூட இன்று நிறைவேறும்.

**கும்பம்**
முயற்சியில் தடையை சந்திப்பீர்கள். பிள்ளைகளின் வழியில் ஆடம்பரச் செலவு கூடும். பணத்தேவை அதிகரிக்கும். ஆதாயம் எதிர்பார்த்து மேற்கொண்ட முயற்சி நிறைவேறாமல் போகும்.

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும். வேலை, தொழில் காரணமாக சிலர் வெளியூர் செல்வர். எதிர்பாராத வேலையால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். அதிகாரிகளுடன் அனுசரித்துப் போவது நல்லது. முயற்சியில் தடைகளை சந்திப்பீர்கள்.

# சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்க!

சென்னை, ஜுன் 02

திருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் வாடும் ஈழத்தமிழ் அகதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று தனது ருவிட்டர் பக்கத்தில் அடுத்தடுத்த பதிவுகளில், ”திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி 13ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் மூவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு முகாம் அகதிகள்மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. விடுதலை செய்தால் தாய்நாட்டுக்குச் சென்று சொந்தங்களுடன் வாழவே அவர்கள் விரும்புகின்றனர். அவர்களை காரணமே இல்லாமல் சிறப்பு முகாம்களில் அடைத்து வைப்பது மனித உரிமை மீறலாகும்,

சிறப்பு முகாம் என்பது முகாம் அல்ல. அது சிறையை விட கொடுமையானது. மனிதர் கள்



வாழத் தகுதியற்ற இடமாகும். கடந்த காலங்களில் பல முறை அவர்கள் போராடிய போது விரைவில் விடுதலை செய்வதாக வாக்குறுதி அளித்த தமிழக அரசு இன்றுவரை விடுதலை செய்யவில்லை,

தமிழகத்தில் ஈழத்தமிழர் நலனுக்காக முதல்வர் மு. க. ஸ்டாலின் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார். சிறப்பு முகாம் அகதிகளும் ஈழத் தமிழர்கள் தான். காலவரையின்றி அவர்களை அடைத்து வைப்பது நியாயமல்ல. அவர்களை உடனடியாக விடுதலை செய்ய முதல்வர் ஆணையிட வேண்டும்” என்று பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்: 5,000 பா.ஜ.கவினர் மீது வழக்கு!

சென்னை, ஜுன் 02

பெற்றோல், டீசல் விலையைக் குறைக்க வலியுறுத்தி தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட முயன்ற பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலை, முன்னாள் தேசிய செயலாளர் எச். ராஜா உள்ளிட்ட 5 ஆயிரம் பேர்மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

சட்ட விரோதமாக கூடுதல், அரச அதிகாரி உத்தரவைமீறி செயல்படுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தடையை மீறி பேரணியாக சென்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி வழக்கு பதிவு செய்தனர். தொடர்ந்து அண்ணாமலையுடன் நடத்தப்பட்ட பேச்சை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

எனினும், பெற்றோல், டீசல் விலையைக் குறைக்கும்வரை போராட்டங்களை தொடரப் போவதாக அண்ணாமலை அறிவித்துள்ளார். (ஐ)

# சசிகலா பாரதிய ஜனதாவில் சேர்ந்தால் வரவேற்போம்!

## அந்தக் கட்சியின் சட்டமன்ற தலைவர்

சென்னை, ஜுன் 02

சசிகலாவை அ. தி. மு. க. வில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று பா.ஜ.க.வில் சேர்ந்தால் நாங்கள் வரவேற்போம் என்று அந்தக் கட்சியின் தமிழக சட்டமன்ற தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

பாரதிய ஜனதா கட்சிக்கு சசிகலாவின் வருகை உறுதுணையாக இருக்கும். இதற்கான முயற்சிகளை நாங்கள் எடுத்து வருகிறோம். கடந்த சில மாதங்களுக்கு முன்பு மத்திய அரசு ஏன் பெற்றோல், டீசல் விலையை குறைக்க வில்லை



என்று தி.மு.க. கூறியது. ஆனால், இரண்டு முறை தற்போது பெற்றோல், டீசல் விலையை மத்திய அரசு குறைத்து விட்டது. இருப்பினும் தமிழக அரசு பெற்றோல் மற்றும் டீசல் விலையை குறைக்க தயாராக இல்லை.

பெயரளவுக்கு பெற்றோல் விலையை மட்டும் சிறிது குறைத்து விட்டு அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டு வருகின்றனர். தி. மு. க. தங்களை பெருமைப்படுத்திக் கொள்வதை முன்னெடுத்து செல்கிறதே தவிர, மக்கள் பிரச்னையை, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற கருத்தை அவர்கள் முன்னெடுக்கவில்லை - என்றார். (ஐ)

# தமிழில் பல பாடல்கள் பாடிய பாடகர் கே. கே. திடீர் மரணம்!

கொல்கத்தா, ஜுன் 02

பிரபல பின்னணி பாடகரான கே. கே. என்றறியப்பட்ட கிருஷ்ணகுமார் குன்னத்து நேற்று முன்தினம் மாலை திடீரென மரணமானார்.

அவர், தெற்கு கொல்கத்தாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சுமார் ஒரு மணி நேரம் பாடல்களைப் பாடியிருந்தார். நிகழ்ச்சி முடிந்த பிறகு அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பியபோது திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு உயிரிழந்தார்.

கிருஷ்ணகுமார் தமிழில் மின்சார கனவு முதல் தி லெஜண்ட் திரைப்படம் வரை 50இற்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

இவரின் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், திரைப் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (ஐ)



# இலங்கையிலிருந்து முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையில் பங்கேற்கார்

கொழும்பு, ஜூன் 02
இந்த வருடம் முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையில் கலந்துக் கொள்ளமாட்டார்கள் என முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு 1,585 இலங்கையர்களுக்கு ஹஜ் யாத்திரையில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. எனினும் டொலர்கள் தட் டுப்பாடு காரணமாக இம்முறை ஹஜ் பயணத்தில் கலந்து கொள் வதில்லை என தீர்மானித்துள்ளனர்.

தேசிய ஹஜ் குழு, ஹஜ் சுற்றுலா அமைப்பு மற்றும் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கடமைகளை பொறுப்பேற்றார் புதிய படைத் தளபதி லியனகே

கொழும்பு, ஜூன் 02
இலங்கை இராணுவத்தின் 24ஆவது தளபதியாக நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

நேற்று முன் தினம் முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து விக்கும் லியனகேவிடம் ஜனாதிபதி அவருக்கான நியமனக் கடிதத்தை கையளித்திருந்தார்.

தற்போது இராணுவத்தில் மிகவும் சிரேஷ்ட அதிகாரியாக இருக்கும் விக்கும் லியனகே, இராணுவத் தளபதியாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்வதன் மூலம் நேற்று முதல் லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றுள்ளார். (அ)

# பத்து வருடங்களுக்கு மேலாக துறைமுகத்தில் கொள்கலன்கள்!

கொழும்பு, ஜூன் 02
சுங்க அதிகாரிகளின் சோதனை நடவடிக்கைகள் காரணமாக இதுவரை 800க்கும் அதிகமான கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

துறைமுகம், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த கொள்கலன்கள் தேங்கியுள்ளமையால், துறைமுகத்தில் பாரிய இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும், அந்த இடங்களில் பயனுள்ள செயல்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் இலங்கை கடல்சார் முகவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில கொள்கலன்கள் 10 வருடங்களுக்கு மேலாக துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசென்றனர்.

இந்த நிலையில், துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சுங்க மற்றும் துறைமுக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக 70 மில்லியன் அமெரிக்க டொலர், கப்பல் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா இதன்போது தெரிவித்தார். (அ)

# விமல் தலைமையில் புதிய அரசியல் கூட்டு!

## கம்மன்பில, வாசுதேவவும் இணைவர்



**கொழும்பு, ஜூன் 02**
**பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உட்பட 9 கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.**

கூட்டணிக்கான பெயர் மற்றும் கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டுவருகின்றது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

'கூட்டு தலைமைத்துவம்' என்பது பிரதான இலக்காக இருந்தாலும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவே, 'தலைவர்' என்ற அந்தஸ்திலிருந்து செயற்படுவார் எனவும் வாசு குறிப்பிட்டார்.

புதிய கூட்டணியானது, அடுத்த பொதுத்தேர்தலில் களமிறங்கினால், பிரதமர் வேட்பாளர் யார் என்ற வினாவுக்கான பதிலையும் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ளார். விமல் வீரவன்ஸ அதற்கு பொருத்தமானவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 9 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் மாலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசியலமைப்பிற்கான உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளன. அந்தவகையில் 9 கட்சிகளின் யோசனை நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் என விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

21 ஐ தோற்கடிப்பதற்கு பஸில் ராஜபக்ஷ முற்பட்டாலும், அதனை முறியடிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என 9 கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய கட்சிகளையும், அமைப்புகளையும் இணைத்துக்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, தேசிய காங்கிரஸ், யுதுகம உட்பட 10 கட்சிகள் மீளப்பெற்றன.

இதனையடுத்து அக்கட்சிகள் பாராளு மன்றத்தில் சுயாதீன அணியாக செயற்பட்டது. இக்கூட்டணியில் இடம்பெற்றிருந்த டிரான் அலஸ், அரசை ஆதரித்து, அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்டுள்ளார். இதனால 10 கட்சி கூட்டணியில் இருந்து அவரின் கட்சி வெளியேற்றப்பட்டுள்ளது. தற்போது 9 கட்சிகள் செயற்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் 9 கட்சிகளுடன் அரசியல் உறவு இருக்கின்றது. எனினும், புதிய கூட்டணியில் இடம் பெறுவது சம்பந்தமாக அக்கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆனால் தேர்தலொன்று வரும்பட்சத்தில் அக்கட்சிகளுடன் இணையும் சாத்தியமே காணப்படுகின்றது.

21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன என்ற அச்சத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் வெளியிட்டிருக்கின்றது. (அ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 02
பூஸா ரயில் நிலையத்துக்கு அருகில் வாகனம் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானமையால், நேற்று கரையோர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

மாத்தறையிலிருந்து பயணித்த சாகரிகா ரயிலில், கார் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதன்போது, காரில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனா 500 மில்லியன் யுவான் மானியம்!

கொழும்பு, ஜூன் 02
சீன அரசாங்கத்தால் 500 மில்லியன் யுவான் மானியமாக வழங்க உள்ளதாகவும், அதன் முதல் தொகுதி இன்று வெள்ளிக்கிழமை நாட்டுக்கு வரும் என கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளால் அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, இலங்கைக்கு தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்க பிரதமர் லீ கெகியாங் நடவடிக்கை எடுத்துள்ளதாக சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சீனத் தூதுவர் கீ சென்ஹொங், 5 வகையான உதவிகள் தொடர்பில் விபரித்துள்ளார்.

அதாவது வேகமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், அதிகளவான வெளிநாட்டு நேரடி முதலீடு, வர்த்தகம், இருதரப்பு கடன் தீர்வு மற்றும் இலங்கைக்கான ஆதரவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு சீனாவிடம் இருந்து இலங்கைக்கு ஐந்து வழி முறையிலான உதவிகளை எடுத்துரைத்தார்.

கடந்த மே 24 அன்று அவர் தனது மனைவி ஜின் கியான் உடன் இலங்கையின் கிழக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் பயணத்தை திருகோணமலையில் இருந்து தொடங்கினார், இவர்களுக்கு ஆளுநர் மற்றும் பல்வேறு தரப்பினரின் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தூதுவர் மற்றும் அவரது மனைவி, சீன வர்த்தக சபை பிரதிநிதிகளுடன் வணிக மன்றத்தில் சந்திப்பு இடம்பெற்றது. அதன்போது இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க, சீன அரசு அதிக முதலீட்டை வழங்கி ஊக்குவிக்க எண்ணி உள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# துமிந்தவின் மன்னிப்பு இடைநிறுத்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு

## சுமந்திரன் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 02
மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தியதுடன், துமிந்த சில்வாவை கைது செய்யுமாறும் உயர் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று முன் தினம் உத்தரவிட்டது.

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவை கொலை செய்த குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கி சிறையிலிருந்து விடுவித்தார்.

அவர் விடுதலை செய்யப்பட்டதற்கு எதிராக பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி மற்றும் மகளான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா ஆகியோரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, கடந்த மே 09 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற கலவரங்களின் போது துமிந்த சில்வா சிங்கப்பூருக்கு தப்பிச்சென்றார். அதன் பின்னர் அவர் மீண்டும் நாடு திரும்பியதாக தகவல்கள் எதுவும் இது வரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பல ஆறுகளினதும் நீர்மட்டம் உயர்வு!

## 8 மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 02

பல்வேறு ஆறுகளினதும் நீர்மட்டம் அதிகரித்து வரும் நிலையில் நாட்டின் எட்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, காலி, களுத்துறை, நுவரெலியா, மாத்தறை மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் இதுபற்றி எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, புளத்கொஹூபிட்டிய, வரக்காபொல ஆகிய நகரங்களுக்கும், மாத்தறை மாவட்டத்தின் கொட்டபொல, பிட்டபெத்தர ஆகிய பகுதிகளுக்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரி-அல்ல, பெல்மடுல்ல, அயகம, நிவித்திகல ஆகிய பிரதேசங்களிலும் மண்சரிவு அபாயம் காணப்படுகிறது. இரத்தினபுரி மாவட்டத்தின் அலபாத்த, கலவான, குருவிட்ட, எஹலிய கொட ஆகிய நகரங்களுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு பற்றிய அறிகுறிகள் தென்படுமாயின் அங்குள்ளவர்கள் உடனடியாக பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்வது அவசியமாகும். இதுபற்றிய மேலதிக தகவல்களை 117 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டின் பல்வேறு ஆறுகளினதும் நீர்மட்டம் அதிகரித்திருக்கிறது. மாதுளுஓயா, குடாகங்கை என்பனவற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் பத்தேகம, வெலிவிட்ட, நியாமகம, நெலுவ, அக்மீமன, நாகொட, அல்பிட்டிய, போபே, போத்தல ஆகிய இடங்களின் தாழ்நிலப் பிரதேசங்களில் சிறு வெள்ளம் ஏற்படலாம். நில்வளா கங்கை - அளுத்கம - கல்ஹாகொட ஆகிய பகுதிகளில் பெருக்கெடுக்கலாம்.

குக்குலே கங்கை, தெதுறு ஓயா ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் பிரதேச வாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று

கொழும்பு, ஜூன் 02

பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழுவின் கூட்டம், இன்று முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நடவடிக்கைகள் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களது உணவு விவகாரம் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும்.

பாராளுமன்றம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 10ஆம் திகதி வரை கூடவுள்ளது.

பாராளுமன்றத்தால் வழங்கப்படும் உணவு தமக்கு தேவையில்லை, வெளியில் இருந்து கொண்டுவந்து உண்பதற்கு அனுமதிக்குமாறு எம்.பிக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரிலிருந்து சென்ற மூவர் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்!

கொழும்பு, ஜூன் 02

**கொழும்பை சேர்ந்த தாய் , மகன் உள்ளிட்ட மூவர் படகு மூலம் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ளனர்.**

கொழும்பை சேர்ந்த ஜெசிந்தா மேரி , அவரது 10 வயதுடைய மகன் மற்றும் மன்னார் சிலாவத்துறையை சேர்ந்த அனிஸ்டன் உள்ளிட்ட மூவரே தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த மூவரும் மன்னார் பேசாலை கடற்கரையில் இருந்து நேற்று முன்தினம் இரவு படகொன்றில் சென்று நேற்று புதன்கிழமை அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள கோதண்டராமர் கடற்கரைப் பகுதியை சென்றடைந்துள்ளனர். இது குறித்து தகவல் அறிந்த மண்டபம் கடலோர காவல் படையினர் மூவரையும் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இன்றைய தினம் ஜூன் மாதம் முதலாம் திகதி வரையில் 83 பேர் கடல் மார்க்கமாக தமிழகம் சென்றுள்ளனர். (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு; கொள்கை வகுப்போரே தீர்மானிப்பர்

கொழும்பு, ஜூன் 02

இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுமா என்பது தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில் கொள்கை வகுப்போர்தீர்மானிப்பர் எனவும் மூலதனச் செலவுகளை குறைத்து முடியுமான துறைகளுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்குவதாக பிரதமர் அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், மக்களின் வரிப்பணத்தில் இருந்து தான் சம்பளம் வழங்க வேண்டும். 2020 இல் மொத்த வரி வருமானத்தில் 86 வீதம் அரச ஊழியர்களின் சம்பளத்துக்கும் ஓய்வூதியத்துக்கும் செலவிடப்பட்டுள்ளது.

இதனால் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்துவதும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவதும் சிக்கலாகிறது.

அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உரிய வகையில் பின்பற்றப்படாததால் இந்த சிக்கல் ஏற்பட்டது. செலவுகளை குறைத்து மக்களை வாழவைக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.கொள்கை வகுப்போர் தொழில் நுட்ப ரீதியாக ஆராய்ந்து சம்பள விடயம் குறித்துத் முடிவு செய்வர்.

மூலதனச் செலவுகளை குறைத்து முடியுமான துறைகளுக்கு நிவாரணம் வழங்க முன்னுரிமை வழங்குவதாக பிரதமர் அறிவித்துள்ளார். (அ)

# இலங்கை வரும் விமானங்களுக்கு இனிமேல் புதியதொரு கட்டுப்பாடு!

கொழும்பு, ஜூன் 02

கொழும்புக்கு வருகின்ற வெளிநாட்டு விமானங்கள் திரும்பிச் செல்வதற்கான போதிய எரிபொருளை நிரப்பி வருமாறு கேட்கப்பட்டுள்ளன. அல்லது அயல்நாடு ஒன்றில் அதனை நிரப்பிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் விமான எரிபொருள் கையிருப்பைப் பேணுகின்ற முன் ஏற்பாடாக இந்த ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை சிவில் விமானப்போக்குவரத்து அதிகார சபைப் பணிப்பாளர்களில் ஒருவர் வெளிநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு விமான நிலையத்தில் வருவது எரிபொருள் நிரப்புவது இன்னமும் நிறுத்தப்படாவிட்டாலும் விமானப் பயண சேவைகள் தடைப்படாது தொடர்ந்து நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காகவே இவ்வாறு போதிய எரிபொருளை நிரப்பி வருமாறு விமான சேவை நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

டுபாய்க்குச் சொந்தமான எமிரேட்ஸ் உட்படக் கொழும்பு வரும் சில வெளிநாட்டு விமானங்கள் வழமையை விட அதிக அளவு எரிபொருளை நிரப்பியவாறு பறக்கின்றன என்றும் சிறிலங்கா விமான சேவையின் நீண்ட தூர விமானங்கள் தென்னிந்தியாவின் விமான நிலையங்களில் இடையில் தரித்து எரிபொருள் நிரப்பிச் செல்கின்றன எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு வரும் சிங்கப்பூர் விமானங்கள் மேலதிக எரிபொருளை நிரப்பிக்கொண்டு அங்கு பறக்கின்றன என்பதைச் சிங்கப்பூர் விமான சேவை நிறுவன அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு சென்று திரும்பும் சர்வதேச விமானங்கள் கடந்த சில நாட்களாக தென்னிந்தியாவில் உள்ள விமான நிலையங்களில் இறங்கி எரிபொருள் நிரப்பிச் செல்கின்றன என்ற தகவலை இந்திய எண்ணெய் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. நாளாந்த தேவைக்கான எரிபொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நீடித்து வருகிறது.வரும் நாட்களில் விமானங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பும் முற்றாகத் தீர்ந்துவிடலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (அ)

# வெளிநாட்டவர்களுக்கு நீண்ட காலத்துக்கு விசா

## புதிய திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 02

நாட்டுக்குள் அந்நிய செலாவணியை கொண்டுவரும் வகையில் வெளிநாட்டவர்களுக்கு நீண்ட கால வீசா வழங்கும் திட்டத்தை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

'கோல்டன் பரடைஸ் விசா' என பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் வெளிநாட்டினருக்கு இணைய வழி ஊடாக விசா வழங்கப்படவுள்ளது.

அதன்படி மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் குறைந்தது ஒரு இலட்சம் டொலர்களை வைப்பிலிடும் வெளிநாட்டவருக்கு 10 வருட காலத்துக்கு விசா வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வைப்பிலிட்ட பணத்தில் 50 ஆயிரம் டொலரை ஒரு வருடத்திற்கு பின்னர் திரும்ப பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மீதமுள்ள 50,000 டொலரை குறைந்தபட்ச இருப்புத் தொகையாக கணக்கில் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு சம்பந்தப்பட்ட வெளிநாட்டவர் உட்பட அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இந்த விசா வசதியின் பலன்களை அனுபவிக்க முடியும் என்றும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்புக்காக குறைந்தபட்சம் 75,000 டொலர் அல்லது அதற்கு மேல் செலவழிக்கும் வெளிநாட்டவர்களுக்கு 5 முதல் 10 ஆண்டுகள் வரை வதிவிட விசாக்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)



## சுற்றுலாத்துறை மேம்பாட்டு பணியகத்தின் தலைவராக டான் ரி.வி. ஆலோசகர் சாலக!

கொழும்பு, ஜூன் 02

இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவராக டான் ரிவி குழுமத்தின் சந்தைப்படுத்தல் பிரதம ஆலோசகர் சாலக கஜபாகு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நேற்று முன்தினம் வழங்கினார்.

கடந்த 27 வருடங்களாக பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியுள்ள சாலக, கடந்த ஆறு மாதங்களாக டான் ரிவி குழுமத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதம ஆலோசகராக பணியாற்றி வருகிறார். அந்தப் பதவியில் தொடர்ந்து பணியாற்றியவாறு சுற்றுலாதுறை மேம்பாட்டுப் பணியகத்தின் தலைவராகவும் பணியாற்றவுள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கி உள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சுற்றுலாத்துறையை மீண்டும் புத்துயிர்ப்புடன் வளர்த்தெடுக்கவேண்டிய நிலையில் சாலக கஜபாகு அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# மு.க.ஸ்டாலினின் கருத்து குறித்து அலட்டிக்கொள்ள தேவையில்லை

### அமைச்சர் பந்துல கூறுகிறார்

**கொழும்பு, ஜூன் 2**

**“கச்சதீவு தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அது அவரின் தனிப்பட்ட கருத்து. இந்திய அரசின் நிலைப்பாடு அல்ல” என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, “இந்தியப் பிரதமர் மோடி பங்கேற்றிருந்த நிகழ்வொன்றின்போது, இலங்கை வசமுள்ள கச்சதீவை மீளப்பெறுவதற்கு இதுவே சிறந்த தருணம் என்று தமிழக முதல்வர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன?” என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல



குணவர்தன,

”ஒவ்வொரு நாட்டிலும் மாநிலங்களில் உள்ள அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் மாறுபடலாம். உதாரணமாக வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை விக்னேஸ்வரன் வகித்தபோது, அவர் பலவிதமான அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். இவை அரசின் நிலைப்பாடு அல்ல.

அவற்றை அரசின் நிலைப்பாடாக சர்வதேசமும் ஏற்காது. அந்தவகையில் தனது தனிப்பட்ட கருத்தை தமிழக முதல்வர் வெளியிட்டிருக்கலாம். இது தொடர்பில் பிரதமர் மோடி எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. இதன் மூலம் இந்தியாவின் நிலைப்பாடு மாறவில்லை என்பதை அறியமுடிகின்றது” - என்றார். (அ)

## யாழ்.பொது நூலகம் எரியூட்டப்பட்டதன் 41 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரியூட்டப்பட்டதன் 41 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ். பொது நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவுக்கும், யாழ்ப்பாண பொது நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து மாரடைப்பால் உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்த நினைவேந்தலின்போது யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்ப்பாணப் பொது நூலக பிரதம நூலகர், யாழ் மாநகர சபை உறுப்பினர்கள், வாசகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பொதுநூலகம்1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி வன்முறைக் குழுவொன்றினால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-03)

## கட்சி முடிவை மீறி அமைச்சு பதவி பெற்ற நிமல், அமரவீரவுக்கு எதிராக நடவடிக்கை!

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 02

கட்சியின் தீர்மானத்தை மீறி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்குக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவர் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என மத்திய குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கமையவே நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ள நீருக்குள் பரீட்சை எழுதிய மாணவர் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம்

கொழும்பு, ஜூன் 02

மழை நீர் மண்டபத்துக்குள் கசிந்துகொண்டிருக்கும்போது மாணவர்கள் பரீட்சை எழுதுவதானது அவர்களின் மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம் வெளியிட்டுள்ளது.

பலத்த மழைக்கு நடுவே வகுப்பறையில் மாணவர்கள் குழுவாக குடை பிடித்தபடி பரீட்சை எழுதும் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் குழுவொன்று இவ்வாறான இக்கட்டு நிலையில் அமர்ந்துள்ளதாக சமூக வலைத்தளங்கள் தொடர்பான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கட்டடத்தில் உள்ள மழை நீர் கசிவு பரீட்சை எழுதும் மாணவர்களின் மனித உரிமைகளை மீறும் செயலாகும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வித் துறையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். எனினும், அந்த பாடசாலை எது என்பது இந்த செய்தி எழு தப்படும்வரை கண்டுபிடிக்கப் படவில்லை.

மழையில் குடைகளை பிடித்தவாறு பரீட்சை எழுதுவதால் மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க



நேரிடும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் குழுவொன்று எதிர்கொண்ட அனுபவம் என்று சிலர் கூறுவதுடன், இன்னும் சிலர் இது ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற நிகழ்வு என்றும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கரிசனை காட்டும் மனித உரிமைகள் ஆணைக் குழுவானது போர் காலங்களில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள பாடசாலைகள் குண்டுத் தாக்குதல்களால் சேதமடைந்து புனரமைக்கப்படாமல் இருந்தவேளையில் பருவ கால மழையின் போது சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்த தமிழ் மாணவர்கள் தொடர்பில் கேள்வி எழுப்பாமல் சென்றது ஏன் என்று வடக்கு - கிழக்கு கல்வியாளர்கள் கேட்டுள்ளனர். (அ)

# மிளிரும் மகாராணி

■ எஸ்.ஜெகதீசன்



(மகாராணியின் பவள விழாக் கொண்டாட்டங்களை இன்று முதல் ஞாயிறு வரை விமரிசையாக நடைபெறு கின்றன)

எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி வின்ஸர் 2 பிரித் தானிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியாகி 70 வருடங்கள் தொடர்ந்து ஆட்சி புரியும் ஒரே ஒரு மாதரசி என வாழ்வு வரவு வைக்க பவள விழா (laitnum jubilee) கொண்டாடும் முதலாவது பிரித்தானிய மா அரசி என வரலாறும் அவரோடு உறவு கொள்கின்றது.

மாட்சிமை தங்கிய மகாராணியின் பவள விழாக் கொண்டாட்டங்களை ஜூன் 2 வியாழன் முதல் ஜூன் 5 ஞாயிறு வரை விமரிசையாக்குவதற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலகம் முழுவதிலும் பவள விழா கொண் டாட்டங் களில் முன்னெப்பொழுதும் இல்லாத எதிர்பாராத பல எதிர்பார்க்கப்படுகின்றது!

பிரித்தானியாவில் கோலாகல நிகழ்வு கள் திட்ட மிடப்பட்டுள்ளதால் பவள விழாவின் பிரமிப்புக்கு குறைவிராது.

1400 க்கும் மேற்பட்ட வீரர்கள் 200 குதிரைகள் 400 இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் பாதுகாவலர்கள் முறை மாறும் மரபார்ந்த விசேட நிகழ்ச்சி செயின்ட் பால் கதீட்ரலில் ராணியின் ஆட்சிக்கான சிறப்பு ஆராதனை ஆகிய வற்றில் மகாராணி சமூக மளிப்பார்.

சாண்ட்ரிங்ஹாம் கோட்டை மற்றும் பால்மோரலின் மாளிகை போன்ற அரச இல்லங்கள் பொதுமக்களின் வரு கைக்காக திறக்கப்படுதல் நாடெங்கும் பெரு விருந் தாய் தெரு விருந்து ஆகிய வற்றில் பொது மக்களின் சமூகம் எகிறும்.

அரண்மனையை அண்மித்த பகுதிகளில் 70 000 மக்கள் தெரு விருந்தில் 'கை நனைக்க' முன்கூட்டியே பதிவு செய்துள்ளனர்.

பாதுகாவலர்கள் முறைமாறும் மரபார்ந்த விசேட நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் அவரது இரண்டாவது மனைவி கமிலா முதலா வது மனைவி டயானாவின் மூத்த மகன் இளவரசர் வில்லியம்ஸ் அவரின் மனைவி கேட் பிள்ளைகளான இளவரசர் ஜார்ஜ் இளவரசி சார்லோட் இளவரசர் லூயிஸ் ராணியின் இளைய மகன் இளவரசர் எட்வேட் அவரது மனைவி சோபி குழந்தைகளான லூ யிஸ் இஜேம்ஸ் ராணியின் ஒரே மகளான இளவரசி ஆன் அவரது கணவர் லாரன்ஸ் ஆகியோருடன் ராணியும் உப்பரிகையில் வீற்றிருப்பர்.

அரண்மனை உப்பரிகையில் கலந்து கொள்வதற்கு இளவரசர் அண்ரூ இளவரசர் ஹரி அவரது மனைவி மேகன் மார்க்கல் ஆகிய மூவருக்கும் எலிசபெத் மகா ராணி தடை விதித்துள்ளார்.

மகாராணியின் மகனான 62 வயதான அண்ரூ பாலியல் வன் கொடுமை தொடர்பான சீற்றத்துக்கு உட்பட்டிருந்தார். 37 வயதுடைய பேரன் ஹரி தனது மனைவி மேகன் மார்க்கலுடன் அரச வாழ்வைப் புறக் கணித்து அமெரிக்காவில் குடியேறினார்.

ராணி தனது உடல்நிலை மற்றும் வயது முதிர்வு காரணமாக ஐக்கிய ராஜ்ஜியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகளில் மட்டுமே கலந்து கொள்வார் என்றாலும் அரச குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் உலகம் முழுவ தும் பயணம் செய்து மைல்கல்லின் பல்வேறு பொது நினைவு நிகழ்வுகளில் பங்கேற்பார்கள்.

இக் கொண்டாட்டங்களையொட்டி ஐக்கிய ராஜ் ஜியத்திலும் இதர 53 பொதுநலவாய நாடுகளிலும் ஏற்றப்படும் தீப் பந்தங்கள் (beAons) ஊடுருவி ஒளியூட்ட பல்வேறு வகையான நிகழ்வுகள் பிரமாண்டமாக ஆண்டு முழுவதும் நடைபெறும் என எதிர்வு கூறப் படுகின்றது.

இலங்கையில் சிறிஜெயவர்தன புர கோட்டயில் சுடரவுள்ள இத் தீப்பந்தத்தை போல 2022 தீப்பந்தங்கள் ஒளி வீசும்.

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் மக்கள் அதிக மாக பயன்படுத்தும் நிலக்கீழ் புகையிரத சேவை ஒன்று பவள விழாவை நினைவு கூரும் வகையில் எலிசபெத் எனப் பெயரிடப்பட்டு மகாராணியால் 2022 மே மாதம் 17 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆவுஸ்திரேலியாவின் தலை நகர் கான்பெராவில் உள்ள பெர்லி கிரிபின் ஏரியின் (Lake Burley Grifif) செயற்கைத் தீவான ஆஸ்பென் தீவு பெயர் மாற்றம் பெற்று மகா ராணி எலிசபெத் 2 தீவு என்று அழைக்கப்படும்.

பொதுநலவாய நாடுகளின் தலை நகரங்களில் உள்ள நினைவுச் சின்னங்கள் பலவும் கட்டடங்கள் சிலவும் ஆண்டு முழுவதும் சீரொளியின் (Laser) ஒளியலை மின்னணுக்களால் விசேட கவர்ச்சி காட்டி ஒளிரும். பிரதம பட்டினங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அலுவலகங்கள் மின் அலங்காரங்களில் மிளிரும். வெளியிடப்படும் முத்திரைகள் பதக்கங்கள் ஓவியங்கள் திரும்பித் திரும்பிப் பார்க்க வைக்கும்!

சாமானியர்களுக்கும் சாம்ராஜ்ஜியம் அளிக்கவுள்ள தெரு விருந்து பெரு விருந்தாக அமையும்!

எலிசபெத் மகாராணியின் படம் இல்லாத வீடுகளே இல்லை என்றும் ஒரு காலம் இலங்கையில் சர்வ சாதார ணமாக இருந்தது பலருக்கும் நினைவிலிருக்கும்.

பொதுவாக எந்தவொரு வீட்டுக்கும் அல்லது ஒட்டு மொத்தமாக நாட்டுக்கும் எலிசபெத் மகாராணி இலங் கையில் செய்த ஒரு பெரிய சேவை வீடுகளிலிருந்த ஓட்டை ஒடிசலை அந்தப் படத்தால் மூடி மறைத்தது தான் என்று சொல்ல இப்போதும் பலரிருக்கின்றனர்.

எலிசபெத் மகாராணி கணவர் இளவரசர் பிலிப் புடன் 1954 ஆம் ஆண்டு அரச விஜயமொன்றை மேற் கொண்டு 10 நாட்கள் இலங்கையில் தங்கியிருந்த வேளையில் மகாராணியின் 28 ஆவது பிறந்தநாளை யொட்டி அவரது பெரிய அளவிலான படம் இலங் கையில் உள்ள சகல மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டு அதனை வீடுகளில் மாட்டுமாறு திணிக் கப்பட்டது. அல்லது பணிக்கப்பட்டது!

வசதியுடன் இருந்தோர் அதனை கண்ணாடிச் சட்டமிட ஏனையோர் அதனை வெறுமனே பொருத்தினர்.

அரசியல் தலைவர்களும் பிரமுகர்களும் பரந்த அளவில் வீடுவீடாக அலங்கரிக்க ஆரம்பித்த கலாசா ரத்தின் நீட்சி இது என்று கருதப்படுகின்றது.

1981ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் உரிமை பேணும் அமைப்பின் 50 ஆவது ஆண்டு விழாவை ஆரம்பித்து வைப்பதற்காக இரண்டாம் தடவை இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

எடின்பரோ கோமகன் பிலிப் பிரித்தானிய கடற் படையில் 1940 ம் ஆண்டு சிறிது காலம் இலங்கையில் பணியிலமர்த்தப்பட்டிருந்தார். அப்பொழுது அவர் விலைக்கு வாங்கிப் பாவனையில் ஈடுபடுத்திய மகிழுந்து இன்னமும் கால்பேஸ் ஹொட்டல் முகப்பில் காட்சிப் படுத்தபட்டுள்ளது.

1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசு ஆனாதில் முடியாட்சி முடிவுக்கு வந்தது.

எனினும் பொது நலவாய நாடுகள் அமைப்பிலிருந்து நீங்கவில்லை.

எலிசபெத் மகாராணி ஒட்டு மொத்தமாக 120 நாடு களுக்கு உத்தியோகபூர்வமாக பயணித்துள்ளார்.

முடியாட்சி முறை நடைமுறையிலிருக்கும் நாடு களின் நாடாளுமன்ற அன்றாட அலுவல்களில் அரசி யின் பங்களிப்பு இருப்பதில்லை. நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் மூலம் தெரிவான புதிய பிரதமரின் நியமன கோரிக்கையை அனுமதிப்பது அல்லது பதவியிலுள்ள பிரதமரின் ராஜினாமாவை ஏற்பது ஒவ்வொரு புதிய அமர்வையும் சிம்மாசன பிரசங்கத்துடன் ஆரம்பித்து வைப்பது இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்ட மசோ தாவிற்கு சட்டபூர்வமாக அரச அங்கீகாரம் வழங்குவது அல்லது தடுப்பாணை (veto) மூலம் நிராகரிப்பது பரிசீல னைக்கு வரும் விசாரணைகளுக்கும் உத்தரவுக ளுக்கும் பிரகடனங்களுக்கும் கோமறை மன்றத்தின் (Pirvy Conucil) தலைவியாக ஒப்புதல் அளித்து நடைமுறைப் படுத்துவது போன்றன மகாரா ணியின் பிரதம பணிக ளாகும். தேவைவரின் போர்ப் பிரகடனம் செய்வதும் இவரது கடமையாகும்.

இவற்றுள் போர்ப் பிரகடனம் கோமறை மன்றத்தின் ஒப்புதல் தவிர்ந்த ஏனையவற்றை முடிக்குரிய நாடுகளில் மகாராணியின் பிரதிநிதியாக மகா தேசாதிபதி கவனித் துக் கொள்வார்.

பிரித்தானிய நாடாளுமன்ற கூட்டத் தொடரை வருடாவருடம் தனது சிம்மாசனப் பிரசங்கத்துடன் ஆரம்பித்து வைக்கும் மகாராணி 1959 லிலும் 1963 லிலும் கர்ப்பமுற்றிருந்தமையாலும் 2022 இல் இயலா மையினாலும் தவற விட்டிருந்தார்.

முடிக்குரிய அடுத்த வாரிசான இளவரசர் சார்ல்ஸ் முதன்முறையாக இம்முறை சிம்மாசனப் பிரசங்கத்துடன் பிரித்தானிய நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஆரம் பித்து வைத்தார்.

உலகெங்கும் 176 பிரதமர்கள் இவரது ஆட்சி காலத் தில் அதிகாரம் செலுத்தியுள்ளனர்.

எலிசபெத் மகாராணியின் பூட்டி அலெக்ஸாண்ட்ரா. பாட்டி மேரி. தாய் எலிசபெத். மூவரின் பெயர்களைச் சேர்த்து எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி என பெயர் பெற்றார். வின்ஸர் என்பது வம்சப்பெயர். லில்லிபெத் என்பது அவரது செல்லப் பெயர்.

பிரித்தானிய அரச பரம்பரையில் அரசரை மணம் புரிபவர் ராணி என அழைக்கப்பட்டாலும் அரசியை மணம் புரிந்தவர் அரசன் என அழைக்கப்படுவதில்லை.

சிம்மாசனத்தை வாரிசாகப் பெறுபவர் மட்டுமே அரசர் என அழைக்கப்படுவர்.

தந்தையின் அல்லது கணவனின் பெயரை தமது பெயருடன் சேர்த்துக் கொள்ளாது வம்சத்தின் பெயரை இணைப்பதே பிரித்தானிய அரச மரபு.

ஏலவே 1558 முதல் 1603 வரை ஆட்சி செய்தவர் எலிசபெத் 1 என்று குறிப்பிடப்படுகின்றார். அதனால் சம்பிரதாய பூர்வமாக இவர் எலிசபெத் 2 என்று அழைக்கப்படுகின்றார்.

எலிசபெத் என்றால் 'கடவுளே என் சத்தியம்' என்பது ஹீப்ரு மொழியில் அர்த்தமாகும். 'சத்தியமே கடவுள்' எனப் பொருள் கொள்வோருமுளர்.

அரச பரம்பரை ஆட்சியின் நீட்சியாக அரியணை யில் அமர்ந்திருந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு இளவர சர் எட்வேட் இளவரசர் ஆல்பேட் எனும் புதல்வர் இருவர்.

தந்தையின் மறைவின் பின் முடிக்குரிய வாரிசான எட்வேட்டை அரியணையில் அமரவிடாது தடை செய்த வாலிஸ் சிம்ஸன் எனும் குடிமகளுடன் ஏற்பட்ட காதல் அடுத்த வாரிசான ஆல்பேட்டை காதலுடன் மன்னராக்க ஆறாம் ஜோர்ஜ் என்ற புதிய பெயருடன் 1936 ல் முடி சூடிக் கொண்டார் இளவரசர் ஆல்பேட்.

இளவரசர் ஆல்பேட்டிற்கும் அவரது மனைவி எலிசபெத்துக்கும் இரு மகள்மார்.மூத்தவர் எலிசபெத். இளையவர் மார்கிரெட் ரோஸ்.

மூத்தவரான எலிசபெத்தின் பிறந்த தினம் 1926 ஏப்ரில் 21ஆம் திகதி எனினும் பொது மக்களும் கொண்டாட்டங்களில் சிரமமின்றி கலந்து கொள்ளும் விதத்தில் கால நிலையை கருத்தில் கொண்டு யூன் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையிலும் கொண் டாடப்படுகின்றது.

1947 ம் ஆண்டு எடின்பரோ கோமகன் பிலிப் மவுண்ட் பேட்டனை மணம் புரிந்து சார்ள்ஸ் ஆன் அண்ரூ எட்வேட் ஆகிய பிள்ளைகள் நால்வரை பெற்றார். 8 பேரப்பிள்ளைகளும் 12 பூட்டப்பிள்ளை களும் உண்டு.

2021 ல் கணவர் 99 வயதில் காலமானார்.

1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி அரசியானார்.

எனினும் 1953 ம் ஆண்டு யூன் மாதம் 2 ம் திகதியே முடி சூடிக் கொண்டார். இடையே உள்ள 16 மாதங்கள் போல் நீண்ட காலத்தை அஞ்சலிக்காக ஒதுக்குவது அரச வழமை.

தொலைக்காட்சி வரலாற்றிலேயே முதன் முறையாக நேரலை ஒளிபரப்பானது அவரது முடி சூட்டு விழா வாகும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# சீனாவில் தங்கியிருப்பதில் இருந்து விடுபடக்கூடிய மாற்றம்

## இலங்கைக்கும் இந்தியாவுக்கு பயனாக அமையும்

இலங்கையை சூழ்ந்திருக்கும் குழப்பநிலைக்கு மத்தியில், கொஞ்சம் ஒழுங்கமைவு ஏற்படுவதற்கான மங்கலான நம்பிக்கை ஒளிக்கீற்று மெதுவாக வெளிக்கிளம்புகின்றது. அவசரகாலநிலையை நீக்கிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயல் முற்றுகைக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் விவகாரங்களை அவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பதை காட்டுகிறது. ராஜபக்சாக்களின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை சீனாவின் பக்கமாக சரிந்து செல்லக் காணப்பட்ட நிலையில் தற்போதைய மாற்றங்கள் இந்தியாவுக்கு ஓரளவு ஆறுதலைக் கொடுக்கவேண்டும்.

ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் மட்டுமீறிய அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசியலமைப்புக்கான 21வது திருத்தவரைவு அண்மையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சகல கட்சிகளினாலும் இந்த வரைவு பரிசீலிக்கப்படவேண்டும் என்று பிரதமர் விக்கிரமசிங்க விவேகமான தீர்மானத்தை எடுத்தார். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது அணியில் இருந்து வெளியேறி விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கத்தில் கடந்தவாரம் இணைந்தார்கள். ஏற்கெனவே ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த விக்கிரமசிங்கவே தற்போதைய கவலைக்குரிய நிலையில் இருந்து ஒரு உறுதிநிலை தோற்றப்பாட்டுக்கு நாட்டை வழிநடத்துவதற்கான தொலைநோக்கையும் முதிர்ச்சியையும் கொண்ட ஒரே அரசியல்வாதியாவார்.

ஜனாதிபதி கோதாபய பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கை இன்னமும் ஆக்ரோஷமாக ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. ஆனால் நாட்டுக்கு இப்போது முதலில் பொருளாதார முனையில் அவசர நடவடிக்கைத் திட்டம் ஒன்று தேவைப்படுகிறது என்ற புரிதல் அரசியல் வர்க்கத்தின் மத்தியில் படிப்படியாக ஏற்பட்டு வருகிறது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக்கொண்ட ஜனாதிபதியை அரசியல் குற்றப்பிரேரணை (Impeachment motion) மூலமோ அல்லது நம்பிக்கையில்லாப் பிரேரணை (No confidence motion) மூலமோ பதவி நீக்குவதென்பது நீண்டகாலத்தை எடுக்கின்ற செயன்முறைகள். இடைக்காலத்தில் அத்தியாவசிய விநியோகங்கள், எரிபொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களுக்கு நிலவும் படுமோசமான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கமுடியாது.

மிகுந்த அனுபவத்தைக் கொண்டவரான விக்கிரமசிங்க சர்வதேச சமூகத்துக்கும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கிக்கும் அயல்நாடுகளுக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் ஏற்புடையவர். அவர் சில நடவடிக்கைகளை விரைவாக எடுக்க ஆரம்பித்து வெற்றிகரமாக தொடருகிறார் போல தோன்றுகிறது. நாட்டு மக்களுக்கு ஆற்றிய தனது முதல் உரையில் அவர் புதிய மாற்று பட்ஜெட், நட்டத்தில் இயங்கும் இலங்கையின் தேசிய விமானசேவையான ஸ்ரீலங்கனை தனியார்மயமாக்கல் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பணத்தை அச்சிடுதல் உட்பட சில யோசனைகளை பொருளாதார மீட்சிக்காக முன்வைத்திருக்கிறார்.

எரிபொருட்கள் ( பெட்ரோலும் டீசலும் தலா 40,000 தொன்கள்), அரிசி, மருந்துவகைகள் மற்றும் பால்மா என்று பல உதவிகளை இந்தியா அனுப்பியிருக்கும் அதேவேளை, உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகளிலும் ஒரு பாத்திரத்தை வகிக்கமுடியும். சீனா மீதும் அதன் கடன் பொறி இராஜதந்திரத்தின் மீதும் இலங்கை மக்கள் கடுமையான சீற்றத்தை கொண்டிருக்கிறார்கள். அந்த இராஜதந்திரத்தின் மூலமாகவே அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற நிலப்பகுதிகள் சீனாவின் சொந்தப்பகுதிகள் போன்று மாறும் நிலை ஏற்பட்டது.

இலங்கையின் மொத்தம் 5000 கோடி அமெரிக்க டொலர்கள் கடனில் 10 சதவீதத்துக்கும் அதிகமானவை சீனாவிடமிருந்து பெற்றதாகும். இது ஒரு குறைமதிப்பான மதிப்பீடேயாகும். அதேவேளை, இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடமிருந்து (Exim Bank of India) 50 கோடி டொலர்களை பெறுவதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கிறது. இந்த வங்கியிடம் இருந்து இலங்கை ஏற்கெனவே 50 கோடி டொலர்களைப் பெற்றிருக்கிறது. அத்துடன் இந்திய அரச வங்கியிடமிருந்தும் (State Bank of India) இன்னொரு 20 கோடி டொலர்களை அந்த நாடு பெற்றிருக்கிறது.

வெளிநாட்டு நாணயக் கையிருப்பை வலுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதிகள் மீதான வாணிப கடன் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு நாணயக் கையிருப்பு வெறுமனே 200 கோடி டொலர்களாக இருக்கின்ற அதேவேளை அந்நாட்டின் இவ்வருடத்துக்கான கடன் மீளச்செலுத்துகை கடப்பாடு 860 கோடி டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் அதன் நிகர உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 60 சதவீதமாகும். பணவீக்கம் 40 சதவீதமாகக் காணப்படுகிறது. இந்த நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுக்க இந்தியா தன்னாலியன்ற சகலதையும் செய்யவேண்டும். சீனாவில் தங்கியிருப்பதில் இருந்து விடுபடக்கூடிய ஒரு மாற்றம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பயனுடையதாக அமையும். பிரதமர் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு ஒரு நேசஅணி.

**(தி இந்து பிஸ்னஸ்லைன் ஆசிரிய தலையங்கம்)**

---

# மிளிரும் மகாராணி

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அதனை 277 மில்லியன் மக்கள் உலகெங்கும் பார்த்துப் பரவசமடைந்தனர்.

இந்தியாவிலிருந்து பெறப்பட்ட பாரிய கோஹினூர் வைரம் அவரது முடியில் அன்று ஒளிர்ந்தது இன்றும் தமது கண்களில் மிளிர்வதாகக் கூறுவதற்கு இன்னமும் பலர் உளர்.

பாடசாலை எதற்குமே செல்லாத இவர் அரசியலமைப்பு வரலாறு சட்டம் கணிதம் பிரான்சு மொழி போன்றவற்றை பிரத்தியேக விரிவுரையாளர்கள் மூலம் வீட்டிலிருந்தவாறே கற்றுத் தேர்ந்தார்.

கணிதம் கற்பித்து கொடுத்தவர் அடங்காத் தமிழன் செல்லப்பா சுந்தரலிங்கம் என கணக்கு காட்டுவோருமுளர்.

ஆறு வயதாக இருக்கும் பொழுது இல்லமொன்றின் உரிமையாளர் ஆனார். 'சிறு குடில்' என அழைக்கப்பட்ட அதனை வேல்ஸ் மக்கள் இவருக்கு அன்பளிப்புச் செய்திருந்தனர்.

ஐக்கிய ராஜ்ஜியத்திலுள்ள பெரும் பணக்காரர்கள் 1000 பேரில் 372 வது இடத்தில் உள்ள இவரின் இன்றைய சொத்து மதிப்பு 365 மில்லியன் பவுண்ட்ஸ் ஆகும். 6.6 பில்லியன் ஏக்கர் நிலம் இவரது பெயரில் உள்ளது.

86.7 மில்லியன் பவுண்ட்ஸ் இறையாண்மை மானியமாக (சம்பளமாக) வருடத்துக்கு ஒரு முறை பிரித்தானிய அரசிடமிருந்தும் மேலும் சில மில்லியன் பவுண்ட்ஸ்களை தனிப்பட்ட சொத்துகளின் மூலம் வருமானமாகவும் பெற்றுக் கொள்ளும் இவர் அதற்கான வருமான வரி செலுத்தத் தேவையில்லை எனினும் 1992 ம் ஆண்டு முதல் தானாகவே முன்வந்து தனது தனிப்பட்ட வருமானத்திற்கு சமனான வரியை வருடந்தோறும் செலுத்தியும் வருகின்றார்.

ராணுவ சங்கங்கள் தொழில் முறை மற்றும் பொது சேவை அமைப்புகள் 600 க்கும் மேற்பட்ட தர்ம தாபனங்கள் தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றில் தலைவியாக இருந்து தன்னார்வத் தொண்டு செய்து வருகின்றார்.

அவரிடம் முதலாவது மின்னஞ்சல் 1976 இலும் டவரி (ஐவொயபசயஅ) 2019 இலும் பாவனைக்குட்பட்டதாக பதிவாகியுள்ளன. குதிரைச் சவாரி புறாப் பந்தயம் உதை பந்தாட்டம் போன்றன அவர் ஆர்வமுள்ள பொழுது போக்குகள் ஆகும்.

தொப்பி அணிவதில் அளப்பரிய விருப்பம் உள்ளவர் அவரைப் போல் வேறு எவருமிலர்.

ஒரே உடையில் இரு தடவைகள் அதிகார பூர்வமான நிகழ்வுகள் எதிலும் அவர் கலந்து கொள்வதில்லை.

1969 ஆம் ஆண்டு முதல் நத்தார் தினத்தில் தொலைக்காட்சி ஊடாக அவரது உரை பெரிதும் விரும்பிக் கேட்கப்படும்

கடவுட் சீட்டு இன்றியே உலகெங்கும் பயணிக்கும் அதிகாரமும் சாரதி அனுமதி பத்திரம் இன்றியே ஐக்கிய ராஜ்ஜியம் முழுவதும் வாகனம் செலுத்தும் அதிகாரமும் இவரிடம் உள்ளது.

இவர் மீது வழக்கு பதிவு செய்ய முடியாது. கைது செய்ய முடியாது.

இவரது தலை கீழாக உள்ள நிலையில் தபால் தலைகளை ஒட்டுவது 'முடிக்குரிய' குற்றம்.

இங்கிலாந்தின் தேம்ஸ் நதியில் உள்ள அன்னப் பறவைகள் இவருக்குச் சொந்தமானவை என்பதும் இங்கிலாந்தின் கடற் பரப்பில் மூன்று மைல்களுக்குட்பட்ட திமிங்கலங்கள் டொல்பின்கள் மற்றும் கோழி மீன் அல்லது துடுப்பு மீன் என அழைக்கப்படும் (Sturgeno) சுறா வகை மீன்கள் கூட இவராலேயே ஆளப்படுகின்றன என்பதும் அரிய ஜீவராசிகளுக்கும் இவர் வழங்கும் பாதுகாப்பை உரிய மனித ஜன்மங்களுக்கே பாதுகாப்பு வழங்காத நாடுகள் கண்டு கொள்ள வேண்டும்.

45 நாடுகளின் நாணயத்தில் இவரது முகம் உள்ளது உட்பட ஏராளமான சாதனைகளுக்கு உரியவராக இவர் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

இது வரை 70 வருடங்கள் மகாராணியாக வீற்றிருக்கும் இவர் 1837 முதல் 1901 வரை 63 வருடங்கள் மகாராணியாகத் திகழ்ந்த இவரது பூட்டியான விக்டோரியா மகாராணியின் சாதனையை 2015 ல் முறியடித்தார்.

2024 வரை ஆட்சி புரிவாரெனின் 1643 முதல் 1715 வரை 72 வருடங்கள் மன்னராக இருந்த பிரான்ஸ் நாட்டின் 14 வது லூயிஸின் சாதனையையும் முடிவுக்குக் கொண்டு வருவார்.

முடியாட்சி முறையில் பரம்பரைக்கே முக்கியத்துவம் என காலாகாலமாக கூக்குரலிட்டவர்கள் குடியாட்சி முறையிலும் வாரிசுகள் முக்கியத்துவம் பெற்று தொடர்ந்து பதவிக்கு வருவதையும் கண்கூடாக கண்டதில் மௌனிக்கின்றார்கள்.

ஆடம்பர வாழ்வு நிலையை முடியாட்சி வளர்ப்பதென்பதும், அதற்கென மக்கள் அநாவசியமாக மேலதிக வரியை செலுத்தும் நிர்ப்பந்தம் ஏற்படுவதென்பதும் முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனக்கருதுபவர்களின் அடிப்படைக் கூப்பாடாகும்!

முடியாட்சி முறையை முடிவுக்கு கொண்டு வர விரும்புபவர்கள் கூட எலிசபெத் மகாராணியின் ஆட்சி முடிவுக்கு வரும்வரை காத்திருக்கவே விரும்புகின்றார்கள்!

பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் நீண்ட காலம் மகாராணியாக இருப்பவர் என்ற பெருமைக்குரிய இவர் பிறந்தது ஓர் அரண்மனையில் அல்ல!

95 வருடங்களுக்கு முன்பு அவர் பிறந்த இடம் கூட இன்று அவருக்குச் சொந்தமானது அல்ல.

அந்த இடத்தில் அருங்காட்சியகம் இன்று வானளாவ காட்சியளிக்கவும் இல்லை.

லண்டனின் மேபியர் 17 புருடன் வீதியில் அவர் பிறந்த இல்லம் 1937ல் இடிக்கப்பட்டு ஒரு சீன உணவகமும் அலுவலகங்கள் சிலவுமே அங்குள.


தமது பட்டத்தையும் பதவியையும் எந்த வகையிலும் கெடுத்துக் கொள்ளாமல் அரசை நிர்வகிக்க விரும்பும் ஆட்சியாளர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு எலிசபெத் மகாராணி!

பொதுச் சேவையில் இவரது அர்ப்பணிப்பு தீர்க்கமாக முடிவெடுக்கும் ஆற்றல் தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாத நேர்மை சுவாரஸியதுடன் உரையாடும் சுபாவம் வார்த்தையில் கனிவு நெஞ்சிலே துணிவு அறிவிலே தெளிவு மனதிலே மானுட நேயம் போன்றவற்றால் பிரித்தானிய மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றார். உலக மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**18)** 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ..................................
ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ..................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..............................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

**21)**

| | | |
|---|---|---|
| 3, | 9, | |
| | 6, | 14, |
| 10, | | 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

....................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

....................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..............................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 25.05.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 25.05.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நெருக்கடி நிலைமை சீராகும்வரை நிதி செலவினங்களை குறையுங்கள்

## கிழக்கு அமைச்சு செயலாளர் பணிப்பு

திருமலை, ஜூன் 02

**நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமை, இயல்பு நிலைக்கு திரும்பும் வரை, கிழக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் நிதிச் செலவினங்களை உடனடியாக குறைக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் தனது அமைச்சின் கீழுள்ள சகல மாகாண திணைக்கள தலைவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.**

தனது அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து திணைக்கள தலைவர்களுடனான தொழில்நுட்ப கலந்துரையாடல் நேற்று முன் தினம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடளாவிய ரீதியிலுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண மக்களும் அதே நிலைமையை எதிர் நோக்கியுள்ளனர். இவ்வாறான நிலையில், அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை மிகச் சிக்கனமாக பயன்படுத்தவேண்டும்.

தங்களது திணைக்களத்திலும், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களிலும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல், அத்தியாவசியமற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், இது வரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள் மற்றும் கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்தவேண்டும்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை மிக நேர்த்தியான முறையில் முன்னெடுத்துச் செல்லவேண்டும் - என்றார். (அ)



# சாய்ந்தமருதில் 5,000 ரூபா வழங்கும் பணி ஆரம்பம்

அம்பாறை, ஜூன். 02

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.றிபாயா உட்பட கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 03 மாத காலத்துக்கு மாதாந்தம் 5,000 ரூபா நிவாரண கொடுப்பனவை வழங்கும் விசேட திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் 2,864 சமுர்த்தி பயனாளிகளும் சமுர்த்தி உதவி பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலிலுள்ள 1161 பயனாளிகளுமாக மொத்தம் 4,025 குடும்பங்கள் இக்கொடுப்பனவை பெறத் தகுதி பெற்றிருப்பதாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தெரிவித்தார். (அ)

# நாட்டுக்கே முன்னுதாரணமாகச் செயற்பட்ட மட்டக்களப்பு செயலக உத்தியோகத்தர்கள்

மட்டக்களப்பு, ஜூன். 02

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருளை மீதப்படுத்தும் நோக்கில் நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக அரசஉத்தியோகத்தர்கள் அனைவரும் மாவட்ட செயலகத்துக்கு பொதுப் போக்குவரத்து மற்றும் சைக்கிள்கள் மூலம் சமூகமளித்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அனைத்துப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. எரிபொருள் விலை உச்சத்தைத் தொட்டுவிட்டது. அத்தியாவசியப் பொருட்களைக் கூட இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லாமல் நாட்டின் கடன் சுமை அதிகரித்துவிட்டது. இந்நிலைமைகளுக்கு மத்தியில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எரிபொருளை மீதப்படுத்தி நாட்டுக்கு நம்மாலான பொருளாதார பங்களிப்பை வழங்கவேண்டியுள்ளதன் அடிப்படையில், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் எரிபொருளை மீதப்படுத்தும் நோக்கில் வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களை சைக்கிள் மற்றும் பொதுப்போக்குவரத்தில் அலுவலகத்துக்கு சமூகமளிக்குமாறு பணிப்புரை விடுக்கக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக நேற்று மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அனைத்து உயரதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பஸ்களிலும், சைக்கிள்களிலும், நடந்தும் அலுவலகத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)







# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 11 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்

## சிறுவர்களுக்கு விளக்கமறியல்

அம்பாறை, ஜூன். 02

அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 11 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 16 வயதுச் சிறுவர் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள 11 வயதான சிறுமி ஒருவர் சம்பவ தினமான கடந்த 23 ஆம் திகதி தனது குடும்பத்துடன் கடற்கரைக்குச் சென்ற நிலையில் இடைநடுவே குறித்த சிறுமியின் மூத்த சகோதரி வீடு செல்ல நேரிட்டமையால், ஏனைய உறவினர்கள் கடற்கரையில் இருக்க விளையாடிக்கொண்டிருந்த 11 வயதான சிறுமியை சகோதரியின் பாதுகாப்புக்காக வீட்டுக்கு அனுப்பியுள்ளனர்.

தனது சகோதரியை வீட்டுக்கு கொண்டு சென்று விட்டு விட்டு 11 வயதான சிறுமி தனிமையாக மீண்டும் கடற்கரைக்கு இரவு 10.30 மணிக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியின் இடைநடுவில் சிறுமியை இடைமறித்த இரு சிறுவர்களும் அவரின் வாயை கையினால் பொத்தி அருகில் உள்ள வீட்டுக்குள் தூக்கிச் சென்று அங்கு ஒருவர் வெளியில் காவல் இருக்க மற்றையவர் அந்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர் வீட்டுக்குள் ஒருவர் உள்வரும் சத்தம் கேட்டு அந்த சிறுமியை மிரட்டி யாரிடமும் சொல்லவேண்டாம், மீண்டும் கூப்பிட்டால் வர வேண்டும் என தெரிவித்து மதிலுக்கு மேலால் தூக்கிப் போட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் முறைப்பாடு செய்ததையடுத்து சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 16 வயதுடைய இரு சிறுவர்களும் கைது செய்யப்பட்டு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் அஜர்படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# சமையல் எரிவாயு தட்டுப்பாட்டால் உணவக தொழிலாளர்கள் பாதிப்பு!

அம்பாறை, ஜூன். 02

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள அதிகமான உணவகங்கள் மற்றும் சிற்றூண்டி வியாபார நிலையங்களும் நீண்ட நாட்களாக மூடிய நிலையில் காணப்படுவதால் அந்த உணகங்களில் நாட்கூலி தொழிலாளர்களாக பணிபுரிவோர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் தொழிலை இழந்ததால் அவர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவுப் பொருட்களின் விலை என்றும் இல்லாதவாறு அதிகரித்து காணப்படுவதால் நாளாந்த உணவுக்குக் கூட கஷ்டப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நடமாடும் சிற்றூண்டி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களும் தமது தொழிலை இழந்துள்ளனர்.

எனவே, வருமானத்தை இழந்த மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் 05 ஆயிரம் ரூபாய் மானியக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில், சிற்றூண்டி மற்றும் உணவகங்களில் நாளாந்த கூலி தொழிலாளர்களாக பணி புரிந்து தொழிலை இழந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியக் கொடுப்பனவை வழங்குவதற்கும் முன்வரவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.



# நேபாள விமான விபத்து; 22 பேரின் உடல்கள் மீட்பு!

காத்மண்டு, ஜூன். 02

நேபாள விமான விபத்தில் சிக்கி பலியான 22 பேரின் உடல்களும் மீட்கப்பட்டு விட்டதாக நேபாள விமான போக்குவரத்து ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தேவ்சந்திர லால் கர்ணா தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் கடைசி பயணியின் உடலை மீட்புக் குழுவினர் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மீட்டதாகவும் அவர் கூறினார்.

நேபாளத்தின் பொக்காரா நகரில் இருந்து சுற்றுலாத் தலமான ஜோம்சோமுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை புறப்பட்டுச் சென்ற விமானம், முஸ்டாங் மலைப் பகுதியில் நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் இந்திய தம்பதியர், அவர்களின் பிள்ளைகள் இருவர், ஜேர்மனியைச் சேர்ந்த இருவர், நேபாளத்தைச் சேர்ந்த 13 பயணிகள், விமானி உள்ளிட்ட 3 ஊழியர்கள் என 22 பேர் இருந்தனர்.

விமானம் நொறுங்கி விழுந்த இடத்தை மீட்புக் குழுவினர் கடந்த திங்கள்கிழமை கண்டறிந்ததை அடுத்து, அதில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியைத் தொடங்கினர். திங்கள்கிழமை இரவு வரை 21 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. செவ்வாய்க்கிழமை காலையும் மீட்புப் பணி தொடங்கியது.

இந்நிலையில் 'எஞ்சியிருந்த ஒரு பயணியின் உடலும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கண்டறியப்பட்டதாக நேபாள விமான போக்குவரத்து ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தேவ்சந்திர லால் கர்ணா தெரிவித்துள்ளார்.

பலியானவர்களில் 10 பேரில் உடல்கள் காத்மாண்டுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஏனையோரின் உடல்களைக் அவரவர் இடங்களுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மோசமான காலநிலை காரணமாகவே விமானம் மலையில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# 9,029 பொதுமக்கள் உக்ரைனில் பாதிப்பு

ஜெனிவா, ஜூன். 02

கடந்த பெப்ரவரி 24 முதல் மே 30 ஆம் திகதி நள்ளிரவு வரை உக்ரைனில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 9,029 என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு உறுதி செய்துள்ளது.

அதன்படி இதுவரை 4,113 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 4,916 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த அமைப்பு உறுதிப்படுத்தியது.

இருப்பினும் மரியுபோல், இசியம் மற்றும் போபாஸ்னா போன்ற பகுதிகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த புள்ளிவிவரங்களையும் இணைத்தால் உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை கணிசமாக அதிகமாக இருக்கும் என்றும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

கனரக பீரங்கிகள், ஏவுகணை மற்றும் வான்வழித் தாக்குதல்கள் காரணமாகவே இவர்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# இரண்டு மாத முடக்க நிலைக்கு பின்னர் இயல்புக்கு திரும்பியது ஷங்காய் நகரம்!

## பொதுப் போக்குவரத்து சேவைகளும் ஆரம்பம்

பீஜிங், ஜூன். 02

கொவிட் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 2 மாதங்களுக்கு மேலாக கடுமையான முடக்க நிலையில் இருந்த சீனாவின் ஷங்காய் நேற்று புதன்கிழமை முதல் மீண்டும் இயல்புக்குத் திரும்பியது.

நேற்று முதல் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பேருந்துகள், ரயில்களில் மக்கள் கூட்டமாக பயணம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

சீனாவின் மிகப்பெரிய நகரத்தில் வசிக்கும் சுமார் 25 மில்லியன் மக்கள் இரண்டு மாதங்கள் நீடித்த கடும் முடக்க நிலையின் கீழ் விரக்தி, மன அழுத்தம் மற்றும் பொருளாதார இழப்பைச் சந்தித்தனர்.

இந்நிலையில் நேற்று முடக்க நிலை தளர்த்தப்பட்டுள்ளதை அடுத்து மீண்டும் சுதந்திரன் பெற்றதாக உணர்கிறேன் என பல்கலைக் கழக மாணவரான ஹாங் மீச்சென் கூறினார்.



எனினும் கொவிட்-க்கு முந்தைய இயல்பு வாழ்க்கைக்கு நகரம் முழுமையாகத் திரும்பவில்லை. உணவகங்களில் இருந்து உணவருந்த தொடர்ந்து தடை அமுலில் உள்ளது. கடைகள் 75 வீத திறனில் மட்டுமே செயற்பட முடியும்.

நகர வாசிகள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதற்கும் பல்வேறு கட்டடங்களுக்குள் நுழைவதற்கும் சமீபத்தில் எடுக்கப்பட்ட எதிர்மறை கொவிட் சான்றிதழ்களை காட்ட வேண்டியுள்ளது.

நகரில் பயணம் செய்வோர் கையுறைகள் மற்றும் முகக் கவசங்களை அணிந்திருந்தனர். (அ)

# இங்கிலாந்தில் இதுவரை 179 பேருக்கு குரங்கம்மை!

லண்டன், ஜூன். 02



இங்கிலாந்தில் மேலும் 71 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு பொது சுகாதார பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இவற்றுடன் நேற்று முன் தினம் வரை அங்கு குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 179 ஆகக் அதிகரித்துள்ளது.

இதேவேளை, உலகின் பல்வேறு நாடுகளின் இதுவரை மொத்தம் 400 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதியாகியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

குரங்கம்மை வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் புண்கள் குணமாகும் வரை மற்றும் சிரங்குகள் ஆறும் வரை மற்றவர்களுடன் நெருங்கிய தொடர்பைத் தவிர்க்குமாறும் வலியுறுத்தியுள்ளது.

மேலும் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் செல்லப்பிராணிகளுடன் மூன்று வாரங்களுக்குத் தொடர்பைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் தங்களைத் தாங்களே 21 நாட்களுக்கு தனிமைப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

தங்களுக்கு வைரஸ் இருப்பதாக சந்தேகிப்பவர்கள் அல்லது குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் சுகாதார மையங்களுக்கு செல்லும்போது புண்களை மறைத்துக் கட்ட வேண்டும், முககவசம் அணிய வேண்டும் மற்றும் பொதுப் போக்குவரத்தை தவிர்க்கவேண்டும். மேலும் பாலியல் தொடர்புகளை தவிர்க்கவேண்டும் எனவும் இங்கிலாந்து சுகாதார பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் முதல் குரங்கம்மை தொற்று மே 7 -ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. (அ)



# சிவெரோடோனெட்ஸ்க் மையத்தை நெருங்கியுள்ளன ரஷ்யப் படைகள்!

கீவ், ஜூன். 02

ரஷ்யப் படைகள் உக்ரைனின் சிவெரோடோனெட்ஸ்க் நகரின் மையப் பகுதியை நெருங்கி விட்டதாக பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற தீவிர மோதலை அடுத்து அவர்கள் முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகரத்தின் பாதிக்கு மேல் இப்போது செச்சென் போராளிகள் உட்பட ரஷ்யப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உக்ரைனுக்கு பொருளாதார, மனிதாபிமான மற்றும் தற்காப்பு இராணுவ உதவிகளை பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

மேலும் ரஷ்யா மற்றும் பெலரஸ் மீது பிரித்தானியா மேலதிக தடைகளை விதித்து வருகிறது என்றும் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# ரஷ்ய எண்ணெய் இறக்குமதிக்கான தடை; ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் இணக்கம்!

பிரஸ்ஸல்ஸ், ஜூன். 02

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தடுக்கும் திட்டத்துக்கு உடன்பட்டுள்ளனர்.

தடையானது ஹங்கேரியின் எதிர்ப்பைத் தொடர்ந்து, கடல் வழியாக வரும் எண்ணெயை மட்டுமே பாதிக்கும். ஆனால் குழாய் எண்ணெய் அல்ல.

ஐரோப்பிய சபையின் தலைவர் சார்ள்ஸ் மைக்கல், இந்த ஒப்பந்தம் ரஷ்ய போர் இயந்திரத்திற்கான பெரும் நிதி ஆதாரத்தை துண்டித்துவிட்டது என கூறினார்.

இது பிரஸ்ஸல்ஸில் நடந்த உச்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆறாவது பொருளாதாரத் தடைகளின் ஒரு பகுதியாகும், இதில் அனைத்து 27 உறுப்பு நாடுகளும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ரஷ்யா தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயில் 27 சதவீதம் மற்றும் அதன் எரிவாயுவில் 40 சதவீதம் வழங்குகிறது. ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவுக்கு வருடத்திற்கு சுமார் 400 பில்லியன் டொலர்கள் செலுத்துகிறது.

ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு ஒரு புதிய எரிவாயு குழாய் திறக்கும் திட்டங்கள் முடக்கப்பட்டிருந்தாலும், இதுவரை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ரஷ்ய எரிவாயு ஏற்றுமதியில் தடைகள் எதுவும் விதிக்கப்படவில்லை. (அ)

ஈழநாடு
Eelanadu

# மே 9 கொழும்பு கலவரம் இதுவரை 2,252 பேர் கைது!


கொழும்பு, ஜூன் 02

கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் கொள்ளுப்பிட்டியில் கடந்த மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 2 ஆயிரத்து 252 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 1010 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் 54ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. அத்தோடு, அலரிமாளிகைக்கு முன்பாகவும் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம்
29 - 10 - 1956

மறைவு
09 - 05 - 2022

### புஸ்பராஜ் வசீகரன்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, சுவிஸ் Geneva, fdlh Montreal, Vancouver ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராஜ் வசீகரன் அவர்கள் 09.05.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான புஸ்பராஜ் சாரதாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லரட்தினம் (Cooperative Inspector), பவளராணி(உரும்பிராய்) தம்பதிகளின் அன்பு மருமகனும், ஷகீலா அவர்களின் அன்புக் கணவரும், துஷான், தனுஷன், சோபியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தன் (Geneva, சுவிஸ்), Dr.சீர்மாறன்(றமணி - அவுஸ்திரேலியா), அன்பரசி(வாசுகி-லண்டன்), மனோகரன்(கனடா), தமயந்தி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கர் (லண்டன்), சேகர் (zurich, சுவிஸ்), சோபனா (லண்டன்), அருந்தலாதேவி (Geneva, சுவிஸ்), Dr.ஜானகி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற Dr.சுதர்சன், மதிவதனி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அச்சுதன், அனுசுயா, சாம்பவி, மீரா, கபிஷன், தர்சன், விதுஷன், நிருஷன், ஜெரிசி, ஜெசிந்தா, ஜெயனி, பாதுஷன், சோபிகன், யேவின், சகானா, ஜெயலக்சன், ஜெசீனா ஆகியோரின் பெரியப்பாவும், மாமனாரும் ஆவார்.

**கிரியைகள்**
Saturday, 04 Jun 2022 11:30 AM - 1:00 PM
Pacific Community Church 5337 180 St, Surrey, BC V3S 4K5, Canada

**நல்லடக்கம்**
Saturday, 04 Jun 2022 2:00 PM
Surrey Centre Cemetery 16671 Old McLellan Rd, Surrey, BC V3S 1K3, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வசந்தன் புஸ்பராஜ் - சகோதரன்**

தொடர்புகளுக்கு:
**ஷகீலா வசீகரன் - மனைவி** Mobile : +17788719587
**சோபியா வசீகரன் - மகள்** Mobile : +16044465229
**வசந்தன் புஸ்பராஜ் - சகோதரன்** Mobile : +41796808010

# சார்க் உணவு வங்கியிடம் உதவி கோருகிறது இலங்கை!

கொழும்பு, ஜூன் 02

இலங்கையின் கடன் நெருக்கடி மனி தாபிமான நெருக்கடியாக மாற்றமடைந்து கொண்டுள்ள நிலையில் இலங்கை தனது அயல்நாடுகளிடமிருந்து உணவு உதவியை கோரியுள்ளது.

சார்க் அமைப்பால் இயக்கப்படும் உணவு வங்கியிடமிருந்து உதவியை பெறுவதற்காக இலங்கை விண்ணப்பித்துள்ளது.

சார்க்கின் உணவு வங்கி சார்க் நாடு களுக்கு ஏற்கனவே அரிசி மற்றும் ஏனைய உணவுப்பொருட்களை அவசரமான நிலையின்போது வழங்கியுள்ளது.

சார்க் அமைப்பால் வழங்கப்படும் உதவியை பெறுவதற்காக விண்ணப்பிக் கும் நடவடிக்கைகளை தற்போது ஆரம் பித்துள்ளதாக இலங்கையின் உணவு ஆணையாளர் ஜே. கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

"நாங்கள் சார்க்கின் உணவு வங்கியை உதவிக்காக தொடர்புகொண்டுள்ளோம்", என அவர் தெரிவித்துள்ளார்.

சார்க்கின் உணவு வங்கி அமைப்பிட மிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் உணவுப்பொருட்களை மானியமாக அல்லது அன்பளிப்பாக எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



## கணேசபுரம் மாணவி மரணம் பிரேத பரிசோதனை வெளியானது!

வவுனியா, ஜூன் 02

வவுனியா கணேசபுரத்தில் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கை நேற்று வெளியானது.

சிறுமியின் நுரையீரலுக்குள் நீர் புகுந்து ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாகவே மரணம் நிகழ்ந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுமியின் உடலில் எந்த காயங்களும் இருக்கவில்லை. சிறுமி துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாக்கப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கணேசபுரத்தை சேர்ந்த சிறுமி கடந்த திங்கட்கிழமை இரவு கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து நடந்த விசார ணைகளில் சிறுமி படுகொலை செய்யப் பட்டிருக்கலாம் என்ற தோரணையில் நகர்ந்திருந்தது. இந்நிலையில் பிரேத பரிசோதனை அறிக்கையில் அவ்வாறு நிகழ்ந்தமைக்கான சான்றுகள் எவையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தாய், தந்தையற்ற அந்த சிறுமி மாமனாரின் அரவணைப்பில் வசித்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமெரிக்க டொலர் 365 ரூபா!

கொழும்பு, ஜூன் 02

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 355 ரூபா 12 சதம் விற்பனை பெறுமதி 365 ரூபா 09 சதம்.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 445 ரூபா 60 சதம். விற்பனை பெறுமதி 461 ரூபா 11 சதம் .

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 381 ரூபா 42 சதம் விற்பனை பெறுமதி 392 ரூபா 25 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 367 ரூபா 91 சதம். விற்பனை பெறுமதி 381 ரூபா 84 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 279 ரூபா 14 சதம் விற்பனை பெறுமதி 290 ரூபா 38 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 252 ரூபா 69 சதம் விற்பனை பெறுமதி 264 ரூபா 7 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபா 74 சதம் விற்பனை பெறுமதி 2 ரூபா 84 சதம்.

இந்திய ரூபாவின் பெறுமதி இலங்கை ரூபாவில் 4 ரூபா 64 சதம், பஹ்ரேன் தினார் 955 ரூபா 16சதம்,ஜோர்தான் தினார் 507 ரூபா 91 சதம், குவைட் தினார் 1175 ரூபா 79 சதம், கட்டார் ரியால் 98 ரூபா 59 சதம், சவுதி அரேபிய ரியால் 96 ரூபா 1 சதம், ஐக்கிய அரபு ராச்சியம் திர்ஹாம் 98 ரூபா 04 சதம். (அ)

## அதிகரித்த வரிகளுக்கான வர்த்தமானி வெளியானது!

கொழும்பு, ஜூன் 02

அதிகரிக்கப்பட்ட வரிகள் நேற்று முதலாம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவால் இந்த வர்த்தமானி வெளியி டப்பட்டுள்ளது.

அரச வருமானத்தை அதிகரிப்பதற் காக பெறுமதி சேர் வரி சட்டம், தொலைதொடர்பு வரி அறவீட்டு சட்டம், பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி சட்டம், நிதி முகாமைத்துவ பொறுப்பு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இந்த வாரம் அமைச் சரவை கூட்டத்தில் அனுமதி வழங்கப் பட்டது.

இதற்கமைய வரி திருத்தங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் செவ் வாய்கிழமை நிதி அமைச்சால் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வரிகளை அமுலாக் கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பெறுமதி சேர் வரி 8 வீதத்தி லிருந்து 12 வீதம் வரையும் தொலைத் தொடர்புகள் வரி 11.25 வீதத்திலிருந்து 15 வீதம் வரையும் அதிகரிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இறைவரி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி என்பனவும் அதிகரிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எம்.பிக்களின் உணவு; இன்று இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 02

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உணவு தொடர்பாக இன்று வியாழக்கிழமை தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் கூட்டமொன்று இன்று இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்றத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்து இதில் தீர்மானிக்கப்படும்.

இதன்போதே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உணவு தொடர்பாக தீர்மானம் எடுக் கப் படவுள்ளது. (அ)

## 138 வைத்திய அதிகாரிகள் வடக்கில் புதிதாக நியமனம்

வடமராட்சி, ஜூன் 02

வடமாகாணத்திற்கு138 வைத்திய அதிகாரிகளுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட பட்டுள்ளதாவது:

மத்திய சுகாதார அமைச்சினால் உள்ளக பயிற்சியை நிறைவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதில் வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 132 வைத்திய அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள். இதில் யாழ் மாவட்டத்திற்கு 23 வைத்திய அதிகாரிகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும், வவுனியா மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும், மன்னார் மாவட்டத்திற்கு 35 வைத்திய அதிகாரிகளும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 31 வைத்திய அதிகாரிகளும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள்-என்றுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# அர்ப்பணிப்புடனேயே இலங்கை வருகிறோம்!

## ஆஸி. அணி அறிவிப்பு

சிட்னி, ஜூன் 02

இலங்கைக்கு எதிராக மூவகை சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்றுவதற்காக அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி இலங்கை வருகின்றது.

கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசுக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கை வருகின்றமை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும். 3 போட்டிகளைக் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர், 5 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் இலங்கையை அவுஸ்திரேலியா எதிர்த்தாடவுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமையை நன்கு அறிந்தவர்களாக அவுஸ்திரேலிய வீரர்கள் துணிச்சலுடனும் அர்ப்பணிப்புத் தன்மையுடனும் இங்கு வருகை தரவுள்ளனர். இலங்கை நிலைமை குறித்து பல தடவைகள் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை நம்பிக்கை தருவதாகவும் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் கேரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலை, எரிபொருள் மற்றும் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு, சுழற்சி முறையில் மின்வெட்டு ஆகியவற்றுக்கு மத்தியில் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடர், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஆகியவற்றை பகல் போட்டியாக நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைக்கு வருவது குறித்து வீரர்கள் அசௌகரியத்தை உணர்ந்தார்கள் என்பதை அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டொட் க்றீன்பேர்க் அண்மையில் ஒப்புக் கொண்டிருந்தார்.

எனினும், இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து கவலைப்படவில்லை எனவும் ஆறு வார காலம் இங்கு தங்கியிருந்து விளையாடவுள்ள அலெக்ஸ் கேரி தெரிவித்தார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தொடர் ஜூன் 7, 9, 11ஆம் திகதிகளில் நடைபெறும். முதல் இரண்டு போட்டிகள் கொழும்பிலும் கடைசிப் போட்டி கண்டியிலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரும் அதன் பின்னர் டெஸ்ட் தொடரும் நடைபெறும்.

பிரெஞ்சு ஓப்பன்:

# ஜோகோவிச்சை வீழ்த்தி ரபேல் நடால் த்ரில் வெற்றி!

பாரிஸ், ஜூன் 02

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் தனது நீண்டநாள் போட்டியாளரான ஜோகோவிச்சை தோற்கடித்து பிரெஞ்சு ஓப்பனின் அரையிறுதிக்கு முன்னேறினார் ரபேல் நடால்.

இந்த வெற்றியின் மூலம், களிமண் தரை ஆட்டத்தில் வல்லவரான நடால் பிரெஞ்சு ஓப்பனில் தனது 14ஆவது பட்டத்தை நோக்கி செல்கிறார்.

பாரிஸில் நேற்று அதிகாலை 1.15 மணிக்கு (உள்ளூர் நேரம்) இந்தப் போட்டி நடைபெற்றது. சவால் மிகுந்த பரபரப்பு நிறைந்த இந்தப் போட்டி நான்கு செற்கள் நீடித்தது.

இதில், 2-6, 6-4, 2-6, 7-6 (7-4) என்ற செற்களில் நடால் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம்




கடந்த ஆண்டு அரையிறுதியில் ஏற்பட்ட தோல்விக்கு நடால் கொடுத்த பதிலடியாக இது அமைந்தது.

21 கிராண்ட்ஸ்லம் பட்டங்களை வென்றவரான ரபேல் நடால், வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள அரையிறுதியில் தரவரிசையில் மூன்றாவது நிலையிலுள்ள அலெக்சாண்டர் ஸ்வெரேவை எதிர்கொள்ளவுள்ளார். (ஐ)

# தலைமையை துறந்தார் பங்களாதேஷ் தலைவர்!

டாக்கா, ஜூன் 02

பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து மொமினுல் ஹக் விலகியுள்ளார்.

2019ஆம் ஆண்டு முதல் பங்களாதேஷ் அணியின் தலைவராக மொமினுல் ஹக் செயல்பட்டு வந்தார். இந்த ஆண்டு தொடக்கத்தில் நியூசிலாந்துக்கு எதிராக வரலாற்று சிறப்புமிக்க டெஸ்ட் வெற்றியை அவர் தலைமையிலான அணி பெற்றது.

ஆனால், அடுத்த 5 டெஸ்ட் போட்டிகளில் 4-இல் தோல்வியை அந்த அணி சந்தித்தது. தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்களை வங்கதேசம் இழந்தது.

இந்த நிலையிலேயே தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதாக மொமினுல் ஹக் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறியதாவது:

“நன்றாக விளையாடும்போது அணி வெற்றி பெறாவிட்டாலும், அணிக்கு உத்வேகம் அளிக்கும் இடத்தில் நாம் இருப்போம். நான் நன்றாக விளையாடாமல் இருக்கும்போதும், அணி வெற்றி பெறாதபோதும் அதை வழிநடத்துவது கடினமானது. எனவே, தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவது சிறந்தது.”, என்றார். (ஐ)






# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் அரையிறுதியில் மார்ட்டினா!

பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு இத்தாலியின் மார்ட்டினா முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லம் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இத்தாலியின் மார்ட்டினா ட்ரிவிசன், கனடாவின் லேலாவை சந்தித்தார்.

முதல் செற்றை 6-2 என வென்ற மார்ட்டினா, அடுத்த செற்றை 6-7 எனப் பறிகொடுத்தார். மூன்றாவது மற்றும் கடைசி செற்றில் மார்ட்டினா 6-3 என அசத்தினார். முடிவில் மார்ட்டினா 6-2, 6-7, 6-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று பிரெஞ்சு ஓப்பனில் முதன் முறையாக அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் அமெரிக்காவின் கோகோ கோப், சக வீராங்கனை ஸ்லோன் ஸ்ரீபன்ஸை 7-5, 6-2 என வீழ்த்தி, அரையிறுதிக்குள் நுழைந்தார். (ஐ)

# ஆஸி. அணிக்கு எதிரான இலங்கை அணி அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 02

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள 3 போட்டிகள் கொண்ட இருபது- 20 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரில் திறமையாக பந்து வீசிய வனிந்து ஹசரங்க டி சில்வா (26 விக் கெட்கள்), மகேஷ் தீக்ஷன (12), துஷ்மந்த சாமீர (9), மற்றும் துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷ (206 ஓட்டங்கள்) ஆகி யோர் இலங்கை இந்த அணியில் இடம்பிடித்துள்ளனர்.

அத்துடன் “சின்ன மலிங்க” என அழைக்கப்படும் மதீஷ பத்திரணவும் அணியில் இடம் பெற்றுள்ளார். அணியின் தலைவராக தசூன் சானகவே செயல்படவுள்ளார்.

அணி விவரம்: தசூன் சானக (தலைவர்), பத்தும் நிசங்க, தனுஷ்க குணதிலக, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, பானுக ராஜபக்ஷ, நுவனிது பெர்னாண்டோ, லஹிரு மதுஷங்க, வனிந்து ஹசரங்க, சமில கருணாரட்ன, துஷ்மந்த சாமீர, கசுன் ராஜித்த, நுவன் துஷார, மதீஷ பத்திரண, ரமேஷ் மெண்டிஸ், மகேஷ் தீக்ஷன, பிரவீன் ஜயவிக்ரம, லக்ஷான் சந்தகன். (ஐ)



# ராஜபக்ஷக்களின் காவலனே ரணில்!

## சஜித் தரப்பு எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 02

மத்திய வங்கியில் நிதி இருப்பதாகவும் இதனால் பிரச்னைகள் இல்லை எனவும் ரணில் கூறுவதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, மஹிந்த ஓடியொளிந்ததைவிட பெரிய இடமொன்றில் ரணிலும் ஓடியொளிய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குழுக்களை அமைத்து காலத்தைக் கடுத்துவதே பிரதமர் ரணிலின் வழக்கமான செயல். தற்போதும் அதனையே செய்துகொண்டிருக்கிறார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான போட்டியால் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் நெருக்கடி நிலைமைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

நாமல் எம்.பியின் எதிர்கால கனவை நிறைவேற்றுவதற்கான வேலைகளையே ரணில் செய்கிறார். இதனை விடுத்து பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்துள்ள நாட்டை ரணிலால் காப்பாற்ற முடியாது.

மே 9ஆம் திகதிக்குப் பின்னர் ராஜபக்ஷர்களுக்கு பயம் ஏற்பட்டிருந்தது. எனினும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று அந்த பயத்தை போக்கியுள்ளார்-என்றார். (அ)

# இலங்கை சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு உயர்வு

## உணவுத் தட்டுப்பாடே காரணம்

கொழும்பு, ஜூன் 02

**இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாக, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் குழந்தைகள் நல வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.**

கடந்த சில நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 53 குழந்தைகளில் 11 பேர் ஊட்டச்சத்துக் குறைபாடுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இருந்து தத்தமது குழந்தைகளை காப்பாற்ற பெற்றோர்கள் வீட்டுத் தோட்டச் செய்கையில் அதிக கவனம் செலுத்துவதுடன், குறுகிய காலத்தில் விளையக் கூடிய சத்துமிக்க உணவு வகைகளைப் பயிரிடுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அண்மைய நாட்களில் 100 இற்கும் அதிகமான நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பொலிஸ் துணைப் பரிசோதகர் வாகன விபத்தில் பரிதாபப் பலி!

கொழும்பு, ஜூன் 02

இரத்தினபுரியில் இடம்பெற்ற விபத்தில் பெல்மடுல்ல பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் துணைப் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாரப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவராவார்.

பொலிஸ் துணைப் பரிசோதகர் பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்ததால் எதிர்த் திசையில் வந்த லொறி மீது நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் ஓட்டோவை ஓட்டிச் சென்ற பொலிஸ் துணைப் பரிசோதகர், படுகாய மடைந்து இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மருந்து கொள்வனவுக்கு அதிக நிதி; உரிய தரப்பினர் மீது நடவடிக்கை

## அரச வைத்தியர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 02

மருந்து கொள்வனவில் அதிக நிதி செலவிடப்பட்டுள்ளமை தொடர்பில், உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அந்த சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இந்த விடயத்தை தெரிவித்தார்.

எனவே, மிகவும் தரமான மருந்துகளைக் கொள்வனவு செய்து, மக்களது பாவனைக்கு அவை தரமானது என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வெல்கம எம்.பி. மீது தாக்குதல் மேலுமொருவர் கைதாகினார்

கொழும்பு, ஜூன் 02

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, அவரது பாதுகாவலர் மற்றும் சாரதி ஆகியோர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அவர் ஹோமாகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் பிபிலை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே இரண்டு பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். (அ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் நேற்று மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 02

சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில், இயக்கப் பணிகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இடைநிறுத்தப்பட்டிருந்த அதன் தொழிற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, முதற்கட்டமாக உலை எண்ணெய், உற்பத்தி செய்யப்படுகிறது. மசகு எண்ணெய் இன்மையால், கடந்த 2 மாதங்களுக்கு மேலாக சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. (அ)

# எரிவாயு வழங்க கோரி மக்கள் கிளிநொச்சியில் வீதி மறியல்!



கிளிநொச்சி, ஜூன் 02

கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்கு நேற்று அதிகாலை முதல் காத்திருந்த மக்கள் ஏ-9 வீதியை மறித்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தொடர்ந்து எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தினமும் நீண்ட வரிசைகளில் காத்திருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுக் கிளிநொச்சிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்துள்ள நிலையில் அவற்றை பெற்றுக் கொள்வதற்காக அதிகாலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்தபோதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படாததையடுத்து நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் எரிவாயு சிலிண்டர்களை ஏ-9 வீதியின் குறுக்காக வைத்து வீதியை மறித்து போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி பொலிஸார் விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த் தையின் அடிப்படையில் ரோக்கன் வழங்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனை அடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட் டது. (அ)

# சீரற்ற வானிலை; ஒருவர் உயிரிழப்பு

## 144 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 02

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்ததாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடமைகளை நிறைவு செய்து வீடு திரும்பிக்கொண்டிருந்த நிவாரண சேவை அதிகாரி ஒருவர், இரத்தினபுரி-குருவிட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு, உயிரிழந்தாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி - கிரியெல்ல பகுதியில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட ஒருவரே இதன்போது உயிரிழந்தார்.

மேலும் சீரற்ற காலநிலையினால் 6 மாவட்டங்களில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, 236 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதமர் பணிப்பு!

கொழும்பு, ஜூன் 02

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் களுத்துறை, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கு இடையில் ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக திறைசேரி நடவடிக்கை திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். (அ)

## மகிந்த...

போராட்டங்களின்மீது கடந்த 9ஆம் திகதி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை சந்தேகநபராக குற்ற புலனாய்வு திணைக்களம் நேற்று நீதிமன்றுக்கு அறிக்கையிட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களான சனத் நிசாந்த, மிலன் ஜயதிலக மற்றும் வசந்த ஹந்தபாங்கொட உள்ளிட்ட 10 சந்தேக நபர்களை எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் நாள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## மகிந்த மீதான...

களம் மீது கடந்த 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இதன்படி, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று விசாரிப்பதாக இருந்தது. ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பில், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் வாக்குமூலங்களை அளிக்காமையால் நேற்றைய தினம் இந்த விசாரணை நடக்கவில்லை.

இந்நிலையில், அனைத்து தரப்பினரின் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னரே மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகளை அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## வடமராட்சி...

வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த ஒருவருக்கும் சுப்பர்மடம் கிராமத்தை சேர்ந்த ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு வந்த சிலர் கைகலப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றது.

இதில், இரு தரப்பிலும் தலா மூவராக ஆறு பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அத்தியாவசிய...

நீக்கப்படுகின்றன என்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

சுங்க அனுமதியின்போது வரிகள் உட்பட பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு பொருட்களை இறக்குமதி செய்யப்படலாம் என்று குறிப்பிட்டுள்ள நிதியமைச்சு, 2022 ஜூன் 7வரை திறந்த கணக்கு இறக்குமதியை அனுமதிக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

நாட்டின் கடினமான பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, அனைத்து பங்குதாரர்களும் அத்தியாவசியப் பொருட்களின் தடையில்லா விநியோகத்தை உறுதி செய்வதற்கு, இறக்குமதியின் நோக்கத்துக்காக வரையறுக்கப்பட்ட அந்நிய செலாவணியை சேமிக்க முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 369 அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்கள்...

திற்கமைய, பாராளுமன்றத்திற்குள் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்கள் நலனுக்காக அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு மாத்திரமே ஆதரவை வழங்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு முரணாக அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்கும் எந்தவோர் உறுப்பினரும் சுதந்திர கட்சியில் வகித்த அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்கப்படுவர். இதற்கமைய தற்போதுள்ள அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்கப்படுகின்றனர் - என்றுள்ளது. (ஐ)

## துமிந்த...

ணிகா ஆகியோர் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் நேற்று முன்தினம் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டபோது ஜனாதிபதியின் பொது மன்னிப்பை இடைநிறுத்தி உத்தரவிட்ட நீதியரசர்கள் குழு, துமிந்த சில்வாவை கைது செய்யவும் உத்தரவிட்டிருந்தது.

துமிந்த சில்வாவை கைது செய்வதற்காக தனிப்படை ஒன்று அமைக்கப்பட்டது. இந்நிலையில், துமிந்த சில்வா ஸ்ரீஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த நிலையில் அங்கு சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர் - என்று அறிய வருகின்றது. (ஐ)

## மதுபான...

ரின் 20 ரூபாயாலும் விலை உயர்த்தப்பட்டன.

இதேசமயம், சில உயர் ரக மதுபான வகைகள் 2500 ரூபாயால் அதிகரித்துள்ளன என்றும், இவற்றுக்கான விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது என்றும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுமதி சேர் (வற்) வரி நேற்று முதல் நடைமுறைக்கு வரும்வகையில் 12வீதமாக உயர்ந்தது. இதையடுத்தே மதுபான வகைகள் விலையுயர்த்தப்பட்டன. (ஐ)

## சகல தனியார்...

வழங்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்காவிட்டால், திங்கட்கிழமையில் முதல் தனியார் பஸ் சேவை முழுமையாக நிறுத்தப்படும். தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள் மூலம் எரிபொருள் வழங்குவதாக கூறப்பட்டாலும், அதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வற் உட்பட பல வரிகள் அதிகரிக்கப்பட்டமையால் பஸ் தொழில் துறை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், எதிர்காலத்தில் மீண்டும் பஸ் கட்டணத்தை அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது என்றும் கூறினார். (ஐ)

## 41 ஆண்டுகளின்...

1981 ஜூன் முதலாம் திகதி சிங்கள வன்முறை கும்பலால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் இடம்பெற்று 41ஆவது ஆண்டுகள் நேற்றுடன் கடந்தன. இந்நிலையில், இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக தென்னிலங்கையில் முதன்முறையாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கோட்டா கோ கம 54ஆவது நிறைவு தினமான நேற்று இடம்பெற்ற பேரணியில் "அரச ஆதரவாளர்களால் யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு 41 ஆண்டுகள்" என்று எழுதப்பட்ட பதாதையை தாங்கியவாறு எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# வன்முறைகளை விசாரிக்க ஆணைக்குழு நியமனம்!

கொழும்பு, ஜூன் 02

நாட்டில் கடந்த மார்ச் 21ஆம் திகதி முதல் மே 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இடம் பெற்ற வன்முறைகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

மிரிஹானை, றம்புக் கணை, காலிமுகத்திடல் போராட்டக்களம் மற்றும் இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் பரவிய வன்முறைகள், தாக்குதல்கள், கொலைகள், கொள்ளைகள், சொத்தழிப்பு மற்றும் எரிப்பு சம்பங்கள் தொடர்பில் இந்தக் குழு விசாரணை நடத்தும்.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஓய்வு பெற்ற நீதியரசர் பி. பி. அலுவிஹார தலைமை தாங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எரிவாயு வழங்கக் கோரி மக்கள் நேற்று எதிர்ப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 02

எரிவாயு வழங்குமாறு கோரி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மாநகரில் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். 7 நாட்களுக்கு மேலாக எரிவாயுவுக்காக காத்திருப்பதாகவும், இதனால், இரவு பகலாக வீதியில் உறங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் இதன்போது வேதனை தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே, பயனியர் வீதியில் எரி வாயுவுக்காக காத்திருந்த மக்கள், எதிர்ப்பு போராட் டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு விநியோகம் செய்யும் இரண்டு முகவர்கள் பக்கச்சார்பாக செயல்படு கின்றனர் என்று குற்றஞ்சாட்டிய மக்கள், இது தொடர்பில் அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ பாராமுகமாகயிருக்கின்றனர்", என்றும் மக்கள் இதன்போது குற்றஞ்சாட்டினர்.

மக்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி. சரவணபவன் ஆகியோரும் ஆதரவாகப் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# மட்டு. மாநகரின் அபிவிருத்தியில் த. தே. கூட்டமைப்புக்கு தடைகள்!

மட்டக்களப்பு, ஜூன் 02

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பை எந்த திட்டங் களையும் முன்னெடுக்க விடாமல் மட்டக்களப்பு மாநகர சபையில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இறந்தோரின் உடல்களை மின்தகனம் செய்வதற்கான இடம் நேற்று கல்வியங்காடு இந்து மயானத்தில் அமைக்கும் பணிகள் நேற்று தொடக்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி. சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் பிரதி முதல்வர் க. சத்தியசீலன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், மாநகரசபையின் ஆணையாளர் மதிவண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர். (ஐ)

# முதலை கடித்து குடும்பஸ்தர் பலி!

கல்முனை, ஜூன் 02

புல் வெட்டுவதற்காக ஆற்றங்கரைக்கு சென்ற குடும்பஸ்தர் முதலை தாக்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாறை - நிந்தவூர் - களியோடை ஆற்றங் கரைப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதில், சடலமாக மீட்கப்பட்டவர் 55 வயதான நிந்தவூர் 9 ஆம் பிரிவைச் சேர்ந்த அப்துல் மஜீட் ஹூசைன் என்பவராவார்.

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை புல் வெட்டுவதற்காக ஆற்றங்கரைக்கு சென்றுள்ளார். அவர் வீட்டுக்கு வராத நிலையில், அவரின் குடும்பத்தினர் அவரைத் தேடினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் முதலையின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. கடற்படையின் உதவியுடன் அவரின் சடலம் மீட்கப்பட்டது.



மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-01)

## பால் பொருட்கள்,...

ணெய்கட்டிக்கு 1000 ரூபாய் வரியாக விதிக்கப்படுகின்றது.

இதேபோன்று, அப்பிள், திராட்சை பழங்கள் மீதான இறக்குமதி வரி ஒரு கிலோகிராமுக்கு 300 ரூபாயிலிருந்து 600 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் சொக்லேட் மற்றும் கொக்கோ கொண்ட பிற உணவு தயாரிப்புகளுக்கு 200வீதம் மேலதிக வரியை நிதி அமைச்சு விதித்துள்ளது. (ஐ)

## அயலவர்...

தார். இதன் பின்னர் வீடு திரும்பியிருந்தார்.

இந்நிலையில், நேற்று நண்பகலுக்கு பின்னர் அந்த மூதாட்டி உயிரிழந்தார் என்று நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, மூதாட்டியை தாக்கினர் என்று கூறப்படும் இரு நபர்களையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். எனினும், மரண விசாரணையின் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

### DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-புலிவால்,ரோமியோ ஜீலியட் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - போத்தலூர் தபால் நிலையம்




**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம் - இசை நிகழ்ச்சி




10.00 மணி : நேருக்கு நேர் - அரசியல் நிகழ்ச்சி

### DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

### DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

### கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

### ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

### CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

### Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு